
இதயக் கோயில்

என்.எஸ்.சிதம்பரம்



இதயக் கோயில்

(கவிதைகள்)

ஆசிரியர் :

என். எஸ். சிதம்பரம்.

கிராமஜோதி நூலகம்

16, இராமகிருஷ்ணமடம் சாலை,

மயிலாப்பூர் : : சென்னை-4

முதற் பதிப்பு, மார்ச்; 1964

விலை ரூ. 1-75

விற்பனை உரிமை:

கிராமஜோதி நூலகம்

16, இராமகிருஷ்ணமடம் சாலை,

சென்னை-4.

Printed in Alliance Press, Madras-4.

வாழ்த்துரை

கி. வா. ஜகந்நாதன் — கல்யாண நகர்,
"காந்தமலை" — சென்னை-28.
18-3-64.

தமிழன்பும் கடவுள் உணர்வும் மிக்க இளைஞர் திரு. என். எஸ். சிதம்பரம் அவர்கள் பல காலமாகத் தமிழில் இயலிசைப் பாடல்களைப் பாடி வருகிறார். இவருடைய இசைப்பாடல்கள் வானொலியில் பல முறை ஒலிபரப்பாகியிருக்கின்றன.

'இதயக் கோயில்' என்ற இந்தக் கவிதைத் தொகுதியில் கடவுள், கலை, அன்பு முதலிய உயர்ந்த பொருள்களைப் பற்றி எழுந்த சிறந்த எண்ணங்கள் பாட்டு வடிவில் அமைந்து அழகு பெற்றிருப்பதைக் காணலாம்.

சொற்கள் இயற்கையாக இணைந்து பொருளோடு செறிந்து இனிய உருவம் பெற்றுக் கருத்தில் ஒளியும் இன்பமும் ஊட்டும்படி அமையும் போது அழகிய கவிதை உருவெடுக்கிறது. சிந்தனை யாற்றலும் கற்பனை வளமும் சொல்லாற்றலும் கலையுணர்ச்சியும் செறிந்த கவிஞர் இந்த அற்புதப் படைப்பை வெளியிட்டுப் படிப்பாரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறார்.

இந்தத் துறையில் இயல்பாகவே திறமை பெற்ற இக்கவிஞருடைய பாடல்களில் சிந்தனையும் கற்பனையும் கைகோத்துக் களிக்கூத்தாடுகின்றன.

இத்தகைய கலைக்கோயில்கள் பலவற்றை இக் கவிஞர் கட்டித் தமிழ் மக்களுக்கு நலம் செய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அன்பன்
கி. வா. ஜகந்நாதன்

பதிப்பாளர் உரை

சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடை நோக்கும் நடைநோக்கும் கொண்ட இந்நூலை ஏற்றுக் கொள்வதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். நண்பர் திரு. **என். எஸ். சிதம்பரம்** அவர்களைத் தமிழுலகம் நன்கு அறியும்.

வானொலி மூலமாகவும் கவியரங்கங்களின் வாயிலாகவும் பத்திரிகைகளின் மூலமாகவும் அவர்களது படைப்புக்களை ஏற்கனவே அறிந்திருந்த நாங்கள் அதைப் புத்தக உருவில் கொணருமாறு அவர்களிடம் கூறினோம். அப்பொழுது பதில் கூருமல் சென்றுவிட்டு, ஒருநாள் திடீரென்று வந்து, 'புத்தகம் வந்துவிட்டது; விற்பனைக்கு நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?' என்று கேட்டார் திரு. என். எஸ். சிதம்பரம் அவர்கள். 'கரும்புத் தின்னக் கூலியா வேண்டும்?' வாய்த்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டோம் நாங்கள்.

'இதயக் கோயில்' எத்தகையது என்பதை அதை நன்குணர்வாருக்குத் தெள்ளிதின் புலனுகும். ஆண்டவனை நேரில் கண்டால் எத்தகைய வரங்களைக் கேட்க வேண்டும் என்று மனக்கோட்டை கட்டும் அன்பர்களுக்கு **'வரம்'** என்ற பகுதி தகுந்த விடையளிக்கிறது. **'அருச்சனை'**யும் **'விழா'**வும் எத்தகைய முறையில் இருக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கூறும் முறை

படித்து இன்புறுதற் குரியது. 'ஆதி கவிஞன்' அவதரித்த முறையை விளக்கும் இவரது கற்பனையில் மூழ்கி நாமும் கவிஞனாக மாற விரும்புகிறோம். 'பாவலனைப் பரவுவமே' என்னும் பகுதி எவ்வாறு தனிச் சிறப்புப் பெற்றிருக்கிறது என்னும் ஊகத்தை வாசக அன்பர்களின் பார்வைக்கு விட்டு வைக்கிறோம். அதை ஊன்றிப் படிப்பவர்க்கு அதன் பெருமை விளங்கும்.

வில்லினின்று புறப்படும் அம்பு 'விர்'ரென்று புறப்பட்டுப் பகைவரைச் சாய்ப்பது போல இவரது உளத்தில் இருந்து தோன்றிடும் கற்பனை அம்புகள் படிப்போரின் சோர்வென்னும் பகையை மாய்ப்பதை நன்கு உணரலாம்.

ஆன்மிகத்தின் அறிவிலே, சமயத்தின் சிறப்பிலே, மறுமலர்ச்சியின் மகிழ்ச்சியிலே, புதுமையின் பொலிவிலே, நாகரிகத்தின் நடிப்பிலே நாம் ஆழ்ந்து விடுவதை இக்கவிதைகள் நமக்குப் புலப்படுத்தும்.

'யாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுக' என்னும் எண்ணத்துடன், இக்கவிதை விருந்தை அருந்த 'வருக, வருக!' என அரியதொரு மகிழ்ச்சியுடன் அன்பர்களை அழைக்கின்றோம்; எங்கள் அழைப்பின் வெற்றி உங்கள் கையில்; விருந்தின் பெருமை உங்கள் ஆதரவில்.

மயிலாப்பூர்
சென்னை-4.

கிராமஜோதி நூலகத்தார்

இந்நூலைப் பற்றி......

இந்நூலில் இடம் பெற்றுள்ள கவிதைகளில் பல "கல்கி", "ஆனந்த விகடன்", "சுதேச மித்திரன்" "சிவாஜி", "கலாவல்லி", "நண்பன்", "உமா", "புதுமை", "மணிமொழி" முதலிய பல பத்திரிகைகளிலும், சிறப்பு மலர்களிலும் வெளிவந்தவை; சில வானொலியில் ஒலிபரப்பப் பெற்றவை. அன்புடன் கவிதைகளைப் பிரசுரித்த பத்திரிகை ஆசிரியர்களுக்கும், உவகையுடன் ஒலிபரப்பிய "வானொலி" நிலையத்தாருக்கும் எனது ஆழ்ந்த நன்றி.

அருள்கூர்ந்து இந்நூலைப் பார்வையிட்டு, அகங்கனிந்து வாழ்த்திய தெய்வத் திருவைச் சிந்தையில் வைத்து எஞ்ஞான்றும் போற்றும் சித்த சிகாமணி - கவிப்பெருந்தகை - கலைமாச்செல்வர் - "கலைமகள்" ஆசிரியர் உயர்திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு எனது இதயம் கனிந்த பெரும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூல் அச்சாகுங் காலத்தில் கவிதைகளை ஒப்புநோக்கிப் பெரிதும் உதவிய உத்தம அன்பர் வித்துவான் உயர்திரு. க. சாமிநாதன் அவர்களுக்கு என்றென்றும் மிகக் கடமைப்பட்டுள்ளேன்.

இதயக் கோயிலில் குடிகொண்டிருக்கும் இறைப் பொருளுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

வாழ்க உலகெலாம்!

19, தேசிகர் சாமி தெரு,
மயிலாப்பூர் : : சென்னை-4.

அன்பன்,
என். எஸ் சிதம்பரம்.

பொருளடக்கம்

உ

ஓம் :

1. இதயக் கோயில் !

1. கோயில் சென்று காண்பேன்—இதயக்
கோயில் குடிகொண் டோனை?
கோயில் சென்றும் காணேன்—இதயக்
கோயில் குடிகொள் ளானை!

2. இமயம் சென்று காண்பேன்—உள்ள
இமயம் அமர்ந்திட் டோனை?
இமயம் சென்றும் காணேன்—உள்ள
இமயம் அமரர் தானை!

3. *மன்றம் சென்று காண்பேன்—நெஞ்ச
மன்றில் ஆடு வோனை?
மன்றம் சென்றும் காணேன்—நெஞ்ச
மன்றில் ஆடா தானை!

4. *அரங்கம் சென்று காண்பேன்—மனத்தின்
அரங்கத் துயில்கொண் டோனை?
அரங்கம் சென்றும் காணேன்—மனத்தின்
அரங்கத் துயில்கொள் ளானை!

---

*மன்றம் என்பது தில்லைப் பொன்னம்பலத்தைக் குறிக்கும்.

*அரங்கம் என்பது திருவரங்கத்தைக் குறிக்கும்.

5. காடு சென்று காண்பேன்—சிந்தைக்
காட்டில் தவம்செய் வோனே?
காடு சென்றும் காணேன்—சிந்தைக்
காட்டில் தவம்செய் யானே!

6. காசி சென்று காண்பேன்—அகத்தின்
காசித் தலங்கண் டோனே?
காசி சென்றும் காணேன்—அகத்தின்
காசித் தலங்கா ணானே!

7. இதயப் பதும பீடம்—அதனில்
இறையாம் சுடரைக் காணில்
உதய மாகும் ஞானம்!—அதனில்
ஒலிக்கும் தேவ கானம்!

2. வரம்!

1. வடிவுடையாய், நீயுமென்பால் வரங்கொடுக்க
வந்தால்
வையகத்தின் உயிர்களெல்லாம் வாழ்வுறச்செய்
யென்பேன்!
மிடியடையா வண்ணமெனை மேன்மையிலே
வைத்து
மேவுமன்பால் பணிசெய்யும் விருப்பளிப்பாய்
என்பேன்!
நடிக்குமொரு வஞ்சர்தமை நண்ணியென்றும்
உள்ளம்
நையாத நிலைமையினை நல்கிடுவாய் என்பேன்!
வடிக்குமின்பக் கவிபாடி வந்தபயன் தேடி
வனப்புறும்உன் அடிநாடும் வகைதாஎன் பேனே!

2. திருவுடையாய், வரங்கொடுக்கச் சேயேன்பால்
வந்தால்
தீங்கெவர்க்கும் நினையாத திறமருள்வாய்
என்பேன்!
பொருளுடையார் பாற்சென்று போற்றிசெய்து
நின்று
புந்திமயங் காததொரு பொற்பினைத்தா
என்பேன்!
அருளுடையார் தமைக்கூடி அறிவின்ப மெய்தும்
அரியசுகப் பெரும்பேற்றை அளித்திடுவாய்
என்பேன்!
தெருளுடைய மனங்கொண்டு திசையெங்கும்
உனது
தெய்வமணங் கண்டிடுமோர் சீர்தாஎன் பேனே!

3. பதமுடையாய், வரங்கொடுக்கப் பரிந்தென்பால்
வந்தால்
பார்க்கின்ற பொருளிலெல்லாம் பரமுன்னைக்
காணும்
இதமுற்றும் மதமற்றும் இருக்கச்செய் யென்பேன்!
எவ்வுயிரும் வாழயெண்ணும் இதயந்தா
என்பேன்!
விதம்விதமாய்ப் பலவரங்கள் விழைந்தேன்என்
றாலும்
விளங்குமுனைக் கண்டவுடன் விழைந்தவற்றை
மறந்துன்
பதத்தின்மேல் ஆசைவைத்துப் பாருமறந் துனையே
பார்த்தபடி இருப்பனெனில் பாக்கியவான்
யானே!

3. அவன் பெருமை!

1. நினைத்தது நிகழ்ந்தால் இந்த
நிலமுதல் பஞ்ச பூதம்
அனைத்தையும் படைத்தும் காத்தும்
அழிக்கவும் செய்து மற்றும்
மனம்மொழி காயங் கட்கும்
மறைக்குமப் பாலாய் நிற்கும்
புனிதனின் சக்திக் கென்ன
புகல்வது பெருமை ஐயா?

2. உளத்தினில் நினைத்த தெல்லாம்
உலகினில் நடப்ப தில்லை!
உளத்தினில் நினையா ஒன்றும்
உடன்வந்து நிகழ்வ துண்டு!
களங்கமில் அறிவால் கூர்ந்து
கவனிக்க விளங்கும்! வல்லோன்
உளப்படி நிகழும் யாவும்!
உத்தமன் பெருமை அஃதே!

3. பகலுடன் இரவும், பொங்கும்
படர்சுடர் தனுடன் தீய
சுகமிலா இருளும் எங்கும்
சூழ்ந்திடப் படைத்த வன்தன்
அகமுறும் கருத்தின் வண்ணம்
அவனியில் நிகழு மெல்லாம்!
திகைத்திடச் செய்ய வல்ல
தேவனின் பெருமை யென்னே!

4. மண்ணினிற் பிறந்து வாழ்ந்து
மாய்ந்திடும் மனிதர் தாமும்
எண்ணிடும் திட்டம் ஒன்றோ?
எண்ணிலாக் கோடி, கோடி!

கண்ணினில் மணியாய்த் தங்கும்
கர்த்தனின் எண்ணம் மாறில்
எண்ணிடும் திட்டம் யாதும்
எய்திட இயலா தையா!

5. கருதிய வண்ணம் போலே
காரியம் நிகழ்த்தும் சக்தி
கருதிய செயலை மாற்றிக்
கருதாத ஒன்றைக் கூட்டும்
பெருகிய சக்தி அந்தப்
பேராளன் தனக்கே உண்டு!
கருத்தினில் அவன்பே ராற்றல்
கண்டிடில் கலக்க மேதோ?

4. சுடர் வீசும் சோதி !

1. நிலைகொள்ளா வாழ்க்கையிலே நெஞ்சம் ஊறி
நெறியற்ருர் மனைவாசல் நித்தம் ஏறி
மலையாகத் தனம்சேர மனம்தான் மாறி
மதியிழந்தார் தமைநாடிக் கதியாய் நின்றேன்!

2. கொடுநஞ்சை உள்ளத்தில் குழைத்து வைத்துக்
குணநலத்தோர் போல்நடிக்கும் கூற்றன் ஞரைக்
கொடுக்கின்ற வள்ளலெனப் போற்றி செய்து
குவலயத்தில் இகழ்வுற்றே அவல மானேன்!

3. பொய்யினையே மெய்யாக்கிப் புறமே பேசும்
பூதலத்தில் நீதமற்ருேர் புகழே சொல்லி
மெய்யினையே பொய்யாக்கும் மேன்மை யில்லார்
மேலன்பாய்த் துதிபுரிந்தே சீல மற்றேன்!

4. வஞ்சகமும் சஞ்சலமும் வாய்ந்த பூமி!
வழிகாட்டும் பெரியோரைப் பழிசொல் பூமி!

தஞ்சமென்று வந்தோரைத் தள்ளும் பூமி!
தன்மையற்ற பூமியிதில் நன்மை காணேன்!

5. எண்ணியெண்ணிப்புண்ணடைந்த இதயம் தானும்
எவ்வகையும் காணுமல் இருந்த போதில்
நண்ணியதோர் உறுதியினை நான்என் சொல்வேன்?
நானிலத்துப் போக்கதனை நான்ம றந்தேன்!

6. "உலகினரைக் குறைகூற உரிமை ஏது?
உண்மையொன்றே நிலைக்குமென்ற உயர்வை ஓது!"
பலவகையாய் என்னுள்ளே பரந்த சக்தி
பகர்ந்தபெரும் பொருள்கண்டே பண்ப றிந்தேன்!

7. பயனில்லா மார்க்கத்தில் பலநாள் சென்று
படுதுயராம் கடல்மூழ்கிப் பரத வித்து
நயமிழந்த எனக்குவெகு நல்ல ஞானம்
நல்கியதோர் சக்தியினை நவில லானேன்!

8. "பாருள்ளோர் செயல்களைநீ பார்க்க வேண்டாம்!
பரந்திருக்கும் அருள்வெளியைப் பரிவாய்ப் பார்ப்பாய்!"
சீருடனே சக்தியதும் செப்பி நிற்கச்
செய்வகையும் தெளிந்துமனச் செழிப்பு முற்றேன்!

9. அகங்குலைந்தே உணர்வில்லா அக்கா லத்தில்
அலைந்தலைந்து வலிகுன்றி அல்ல லுற்றேன்!
சுகிர்தமுடன் அருட்சக்தித் திறத்தைக் காணச்
சுடர்வீசும் சோதிஎனைச் சூழ்ந்த தம்மா!

5. அருச்சனை !

1. வள்ளலுன்றன் திருக்கோயில்
வலம்வந்துன் சந்நிதியின்
தெள்ளியநற் கதவுமெப்போ
திறக்குமென்று காத்திருந்து
கள்ளமில்லா அடியார்கள்
கதவதுவும் திறந்தவுடன்
உள்ளுனது சந்நிதியை
உவகையுடன் நாடினரே!

2. வெற்றிலையும், தேங்காயும்,
விரும்புசுவைப் பழம்,பாக்கும்
கற்பூரம் பூவொடுதேன்
கற்கண்டும் கரத்தேந்திப்
பற்றியதோர் ஆர்வமுடன்
பரமே,உன் சந்நிதியைப்
பெற்றிடுவோம் நலமென்றே
பேரன்பர் நாடினரே!

3. கரத்தினிலே பழம்,பாக்கு,
கற்பூரம் எதுவுமின்றிப்
பரமே,உன் சந்நிதிக்குப்
பாழ்மனத்தேன் நாடிவந்தேன்!
தரமற்றேன் வெறுங்கரத்தோன்
தகுதியில்லோன் எனக்கருதி
வரம்பின்றித் தள்ளுவையோ?
வாழ்வும்நீ அருளுவையோ?

4. தேங்காய்என் உள்ளம்ஐயா!
சேரும்அன்பு பழம்ஐயா!
பாங்கான என்ஆர்வம்
பற்றுங்கற் பூரம்ஐயா!
ஓங்காரத் தொளிர்சுடரே!
ஒப்பியெனைப் பணிகொண்டு
தூங்காத சுகமளிப்பாய்!
தொழும்பனென்றன் இசையேற்பாய்!

6. விழா!

[ஆலயமொன்றில் நிகழ்ந்த பெருந் திருவிழாவைக் காண ஆயிரக் கணக்கானவர்கள் வந்தனர். அங்ஙனம் வந்தவர்கள் உண்மையில் விழாச் சீரைக் கண்டார்களா? ஆண்டவனது அருட்கலை வடிவைக் கண்டு அங்கமெலாம் அவர்கள் சிலிர்ப்பெய்தப் பெற்றுர்களா? என்றெல்லாம் ஐயப்பாடு உள்ளத்துள் எழுந்தது. அதன் விளைவாக அரும்பியது இக்கவிதை.]

1. ஐயனே! உன் விழாக்காண
   ஆசையுடன் பலர்வந்தார்!
   மெய்யாக உனைக்கண்டு
   மெய்சிலிர்த்தோர் எத்தனைபேர்?
   பொய்க்காலின் புரவிகண்டார்!
   புகழ்மிகுந்த யானைகண்டார்!
   நெய்யன்னச் சுவைகண்டார்!
   நின்விழாச்சீர் கண்டாரா?

2. விண்தேடும் கோபுரத்தில்
   விளங்குசுடர் கண்டாரா?
   பண்பாடும் திருக்கூட்டம்
   பக்தியுடன் கண்டாரா?
   கண்நாடும் கனிவுடன்நின்
   கலைவடிவம் கண்டாரா?
   எண்கூடி நிற்கும்உன்றன்
   இசையெல்லாம் கண்டாரா?

3. வேடிக்கைக் காட்சிகளில்
   வேருன நிகழ்ச்சிகளில்
   நாடியுள்ளம் நின்றதல்லால்
   நாயகனே, நின்விழாவின்
   கூடுமெழிற் சீர்சிறப்பைக்
   கூர்ந்துகண்டோர் எத்தனைபேர்?
   ஆடும்உன்னைக் கண்டவருள்
   அடியேனும் உண்டோதான்?

7. வேண்டுதல்!

1. 'முருகனிடம் கேட்கின்ற பாட லாக
முறையிட்டு வேண்டுகின்ற பாட லாக
அருமைமிகும் பாட்டியற்றி அருள்க' என்றார்
ஆசையுடன் நரசிம்ம அன்பர் தாமே!

2. 'எதைக்குறித்து வேலனிடம் கேட்க வேண்டும்
எனவிளக்கம் தெரிவித்தால் இயற்றும் பாட்டில்
அதையமைத்துத் தருகின்றேன்! அன்ப ரே,நீர்
அகமுருகிப் பாடி நலம் அடைக' என்றேன்!

3. குடியிருக்கப் புதியதொரு மனையும் செல்வம்
கொழிக்குமொரு நல்வாழ்வும் கொடுத்த வள்ளல்
படிமிசையே இகசுகங்கள் மேலும் மேலும்
பரிந்தளிக்கும் பாட்டியற்றப் பணித்திட் டாரே!

4. நரசிம்மர் நாட்டமதை நன்க றிந்தேன்!
நசியாத பரசுகத்தை நல்கும் பெம்மான்
பரஞான முருகனிடம் பதத்தை வேண்டிப்
பாடுவதே முறையென்று பகர்ந்திட் டேனே!

5. 'பரம்வேண்டி நிற்கின்ற பாடல் வேண்டாம்!
பாரினிலே நான்வாழப் பாடல் வேண்டும்!
விரைந்தியற்றித் தருக'வென்றார்! நரசிம் மர்தம்
விருப்பம்போல் இயற்றுது விழித்தே னையா!

6. மனைமக்கள் தன்சுற்றம் மகிழ்ந்து வாழ
வானளவும் வீடுகட்டிச் சிறந்து வாழ
வினைதீர்க்கும் குகனிடமா கேட்க வேண்டும்?
வினைப்படுத்தும் சுகங்களையா விழைய வேண்டும்?

8. ஆதி கவிஞன்!

முதன் முதலாகத் தோன்றிய முதற்கவிஞனை அதாவது ஆதி கவிஞனைப் பற்றியதொரு கற்பனை.

[பரமன் பரிவுடன் பாரினைப் படைத்தல்.]

அணுவில் அணுவாய் அறிவில் அறிவாய்
அழகில் அழகாய் அமைப்பில் அமைப்பாய்
விண்ணில் கதிராய் வெண்மை மதியாய்
விரிவில் விரிவாய் வெளிக்குள் வெளியாய்
வித்தில் விளைவாய் விளைவின் பயனாய்க்
கடலாய் மலையாய்க் காற்றாய் நதியாய்ப்
பண்ணாய் இசையாய்ப் பாட்டின் சுவையாய்
மலராய் மணமாய் மணியாய் ஒலியாய்ப்
பதியாய்க் கதியாய் விதியாய் நிதியாய்
உயிராய் உடலாய் ஒன்றாய் இரண்டாய்
உருவாய் அருவாய் உன்னுதற் கரிதாய்
இன்பாய்த் துன்பாய் இரவாய்ப் பகலாய்ப்
புலனாய் நிலனாய்ப் பொறியாய் நெறியாய்
மானாய் மீனாய் மயிலாய்க் குயிலாய்க்
கலையாய் நிலையாய்க் கணக்கில் பலவாய்
முதலாய் இடையாய் முடிவாய் வடிவாய்
ஞான மோங்கும் மோன வரம்பாய்
ஓமெனும் நாத உயர்கலை விந்தாய்
எங்கும் தங்கும் இறையோன் பரமன்
பரிவு கொண்டே பாரினைப் படைத்தனன்!

[பாரிளைக் காட்ட பரமன் பராபரியை அழைத்தல்.]

வேறு

அண்டமுமாய்ப் பிண்டமுமாய்
அகிலசரா சரங்களுமாய்க்
கண்டமுமாய்ப் பண்டமுமாய்க்
காண்பொருள்கள் சகலமுமாய்
எண்டிசையும் பெருவியப்பாய்
எழிலான வண்ணமுமாய்க்
கொண்டெதையும் இயக்குமொரு
குணசக்தி அருள்தேவி!

அருள்பெருகும் சக்தியினுல்
அகிலமதைத் தொழிற்படுத்திக்
கருணையெனும் தாய்மைக்குக்
கனிவான விளக்கமதாய்த்
தெருள்நிறைந்த பரமனெடு
திருநடனம் ஆடிவரும்
பொருள்நிறைந்த சக்தியவள்
புவிக்கெல்லாம் தாயாவாள்!

தாயவளே பரமனுடை
தனிப்பெரிய நற்றேவி!
நேயமொடு பரமன்தன்
நெஞ்சோங்கும் ஓவியமாய்
ஆயமறைப் பெருமுடிவாய்
ஆனபர நாயகியாய்த்
தூயவெளித் தோற்றமதாய்த்
துலங்குமொரு சுடரானுள்!

அன்னவளை அருந்தவத்தை
அன்புருவை அறத்திருவை
இன்னமுதைத் தன்னுயிரை
இதயமுறை அன்னத்தை

நன்னயத்தைச் சக்தியெனும்
நாதமணிப் பீடமதைப்
பன்னயமார் படைப்புணர்த்தப்
பரமனுமே அழைத்திட்டார்!

[பரமனும், தேவியும்.]

வேறு

பரமன் :— ஒப்பில்லா வடிவழகே!
ஓமென்னும் அருட்சக்தி!
தப்பில்லா திப்புவியைத்
தயையாலே படைத்திட்டேன்!

தேவி :— பெருங்கருணை கொண்டிந்தப்
பிரபஞ்சம் சமைத்திட்ட
அருமிறையோய், நும்முடைய
ஆற்றலினைக் காட்டீரோ?

பரமன் :— காட்டிடவே உனையழைத்தேன்
கனிவுடைய கற்பகமே!
நாட்டிடுவாய்க் கவனமதை
நன்றென்றன் படைப்பதிலே!

தேவி :— கற்பனையின் சிகரமதில்
களிநடமே புரிந்திடுமோர்
அற்புதமார் மலர்த்தேவா,
அருட்படைப்பைக் காட்டிடுவீர்!

* * *

பரமனும் தேவியைப் பாங்குடன் அழைத்திடப்
பரமெனும் சக்தியும் பரிவுடன் சென்றனள்!
தரமுடன் தேவனும் தரணியைப் படைத்தநல்
வரமெனும் விந்தையை வகையுடன் காட்டினன்!

[பரமன் தனது படைப்பு ஒவ்வொன்றையும் தேவிக்குக் காட்டுதல்.]

வேறு

பரமன் :— வானைக் காணாய் தேவி!
வண்ண மதியைக் காணாய்!
மானைக் காணாய்! கோல
மயிலைக் குயிலைக் காணாய்!

தேவி :— விண்ணைக் கண்டேன் தேவா!
விளங்கும் கதிரைக் கண்டேன்!
மண்ணைக் கண்டேன்! அதனில்
மலரும் மலரைக் கண்டேன்!

பரமன் :— வசந்தம் காணாய் தேவி!
வளமார் தென்றல் காணாய்!
இசையும் காணாய்! கடலும்
இன்ப அலையும் காணாய்!

தேவி :— குன்றைக் கண்டேன்! இயற்கைக்
கூத்தின் அமைப்பும் கண்டேன்!
கன்றைக் கண்டேன்! பசுவின்
கனிந்த முகமும் கண்டேன்!

[பரமன் அன்புடன் தன் படைப்பினை ஒவ்வொன்ருகக் காட்டிவர, உன்னத சக்தியாகிய தேவி ஒவ்வொன்றையும் கூர்ந்து கண்டுகொண்டே வருதல்.]

வேறு

பரமன் :— சீலமொடு காலமதைச் சிறப்பாக வகுத்திட்டுச்
சீரோடே ஐம்பூதச் சேர்க்கையையும் அமைத்திட்டுக்

2572

கோலமொடு குறிகளையும் குணங்களையும்
அளவிட்டுக்
கூறுகின்ற என்படைப்பைக் கூர்ந்திடு
வாய் அருளணங்கே!

தேவி :— நீலமொடு பலவண்ணம் நிறைந்திடவே
செய்திட்டு
நீரோடு நெருப்போடு நிலத்தோடு
காற்ருேடு
சாலமொடு விண்ணேடு சாருமிந்தப்
புவனமதைச்
சமைத்திட்ட பெருந்தேவா, சகலமதும்
காண்கின்றேன்!

பரமன் :— ஆணேடே பெண்ணேடே அலியோடே
மிளிர்கின்ற
அழகோடே உருவோடே அருளோடே
பொருளோடே
தேனேடே அமுதோடே திரண்டநவ மணி
யோடே
தேர்கின்ற கலையோடே திகழ்படைப்
பைக் கண்டிடுவாய்!

தேவி :— கோனேடு குடியோடு குலமோடு வளமோடு
கோடோடு வீடோடு நாடோடு
காடோடு
பூனேடு புல்லோடு புழுவோடு விலங்கோடு
புள்ளோடு வளர்கின்ற பூதலத்தைக்
கண்ணுற்றேன்!

வேறு

பரமன் :— வண்ணம் பெருக்கிக் காட்டுமொரு
வான வில்லைப் பார்தேவி!
எண்ணம் ஈர்க்கும் விந்தைபல
எங்கும் நிறையப் பார்தேவி!

தேவி :— விலங்கிற் கெல்லாம் அரசாகும்
வீர சிம்மம் கண்டேன்நான்!
இலங்கும் வானப் பெருவிரிப்பில்
எண்ணில் சுடர்கள் கண்டேன்நான்!

பரமன் :— தவழ்ந்து தவழ்ந்தே அலையெழுப்பித்
தங்கிப் பொங்கி யோடுகின்ற
அமிழ்தாம் நதிகள் வளம்பாய்ச்சும்
அழகைக் காணாய் என்அன்பே!

தேவி :— சோகம் தவிர்க்கும் இசையுடனே
சொரியும் அருவி பலகண்டேன்!
போகம் கொடுக்கும் வாழ்வின்பம்
பொருந்தக் கண்டேன் எங்கெங்கும்!

வேறு

பரமன் :— படத்தை யெடுத்தாடும் — நல்ல
பாம்பைக் கண்டிடுவாய்!
குடத்தின் திருவுருவைத் — தேவி,
கூர்ந்தே நோக்கிடுவாய்!

தேவி :— பொன்னும் நவமணியும்—இன்பப்
போகப் பொருள்பலவும்
மின்னும் அணிபலவும்—தேவா,
மிகவும் கண்டேனே!

பரமன் :— சோலைப் பூங்காற்றும்—எங்கும்
சுகந்த நறுமணமும்
காலை மலர்ச்சியதும்—மாலைக்
காட்சி யதும்பாராய்!

தேவி :— வண்டின் எழில்கண்டேன்!—தேவா,
வளரும் கொடிகண்டேன்!
மண்டும் மூலிகையும்—விருட்ச
வகையும் கண்டேனே!

வேறு

பரமன் :— மதிநாணும் முகப்பொலிவும்
மலர்முத்து வெண்ணகையும்
குதித்தோடும் மான்நோக்கும்
கொண்டஎழிற் பெண்ணினமும்
நிதியாகும் புயக்குன்றும்
நிமிர்ந்தநடைப் பெருவீறும்
பதிந்தோங்கும் ஆணினமும்
பாராய்என் இன்னுயிரே!

தேவி :— பெண்ணுக்கோர் நல்லாணும்
பேராணுக் கோர்பெண்ணும்
விண்ணுக்கோர் பெருவெளியும்
விரிவான கடற்பரப்பும்
மண்ணுக்கோர் தாவரமும்
மட்டில்லா உயிரினமும்
கண்ணுக்கோர் இனிமைதரும்
காட்சிகளும் கண்ணுற்றேன்!

வேறு

பரமன் :— வேய்ங்குழலின் இசைகேளாய்!
வேதமதின் ஒலிகேளாய்!
பாய்ந்தோடும் நதிகளுடைப்
பாட்டதையும் கேள்தேவி!

தேவி :— மகரயாழ் தரும்இசையும்
மாங்குயிலின் தீங்குரலும்
மிகுந்தொலிக்கும் பேரிகையில்
மிஞ்சுமிசை யதும்கேட்டேன்!

பரமன் :— ஓங்கியொளிர் மாமணியின்
ஓங்கார ஒலிகேளாய்!
தீங்கில்லா வண்டினுடை
ரீங்காரம் கேளாய்நீ!

தேவி :— மகிழ்வூட்டும் சங்கினுடை
மாநாதம் கேட்கலுற்றேன்!
புகழ்நாட்டும் மகுடியதன்
புனிதஇசை கேட்கலுற்றேன்!

பரமன் :— நடமாடும் அணங்குகளின்
நல்லிசையும் கேள்தேவி!
திடமாகப் பறவையொலி
திக்கெங்கும் கேட்டிடுவாய்!

தேவி :— குழந்தைகளின் மழலைமொழி
குறிப்புடனே கேட்டுவந்தேன்!
குழைவாகச் செவிக்கினிய
கூத்தொலியும் கேட்கலுற்றேன்!

வேறு

பரமன் :— வெண்மைநிற மல்லிகையும்
விரிசிவப்புத் தாமரையும்
தண்மைநிறை மருக்கொழுந்தும்
தங்கநிறச் செவந்தியதும்
வண்ணமிகு ரோசாவும்
வளர்நீலக் குவளையதும்
எண்ணற்ற மலர்வகையும்
இனிதாய்நீ காண்தேவி!

தேவி :— வாசமதை வீசியின்ப
வளப்பமதை நாட்டிவரும்
நேசமலர் இனம்கண்டேன்!
நெஞ்சோங்கும் பேரிறைவா,
ஆசையுடன் மேனிதனில்
அள்ளிமிகப் பூசுமொரு
வாசமிகும் சந்தனமாம்
மரம்கண்டேன்! மணம்துய்த்தேன்!

வேறு

பரமன் :— நுகர்ந்திடவே இனியனவாம்
நுண்மலர்கள் காணலுற்ருய்!
சுகமான கனிவகையும்
சுகிர்தமுடன் காண்தேவி!

தேவி :— மாங்கனியும் கொய்யாவும்
மாதுளமும் முந்திரியும்
தீங்கனியாம் திராட்சையதும்
திவ்யமுடன் கண்டேனே!

பரமன் :— திருவாழைப் பலாக்கனியும்
தீதில்லா நெல்லியதும்
உருவான கீரைகளும்
உயர்கிழங்கும் கண்டிடுவாய்!

தேவி :— தின்னவெகு சுவையான
தீங்கரும்பும் கனிகிழங்கும்
இன்னமுதும் வாய்க்கினிதாய்
இதமாகக் கண்டேனே!

வேறு

பரமன் :— உயர்ந்த இனிமைத் தென்றல்
உடலில் சாரக் காணுய்!
அயர்வும் சோர்வும் போக்கி
அளிக்கும் சுகமும் காணுய்!

தேவி :— மேனி சுவைக்க நல்ல
மேன்மை யின்பம் கண்டேன்!
வானை எட்டும் ஆலும்
மகிமை அரசும் கண்டேன்!

[படைப்பனைத்தும் காணலுற்ற பராபரி ஒன்றும் பகராததைக் கண்ட பரமன் வினவுதல்.]

வேறு

பரமன் :— ஞாலமதை எல்லையற்ற
நற்றிறத்தால் பேரறிவால்
காலமொடு படைத்திட்டேன்!
கற்பகமே, உணர்ந்தநீ
கோலமுடன் என்பெருமை
குறிக்கவொரு வார்த்தையதும்
சீலமுடன் உரையாயோ?
சித்தமுறும் என்னறிவே!

தேவி :— (மௌனம்)

பரமன் :— ஞானவாய் திறந்துநீ
நற்பதமே உரையாமல்
மோனமாய் இருப்பதென்ன?
முற்றியஎன் படைப்பினிலே
கோணலாய்க் குறையுமுண்டோ?
கூறிடுவாய் இதுதருணம்!
கானமதாய் இன்பமதாய்க்
கலந்திட்ட என்தேவி!

[தேவி தன் உள்ளக் கிடக்கையைத் தெளிவுபடக் கூறுதல்.]

வேறு

தேவி :— மெய்யால் சுகித்திட மேலாம் சுகங்களும்
வாயால் உண்டிட வளமார் சுவைகளும்
கண்கள் கண்டிடக் கணக்கில் காட்சியும்
நாசி நுகர்ந்திட நறுமண வகைகளும்
காதால் கேட்டிடக் கான நயங்களும்

புலன்வழி நுகரும் நலன்கள் பொருந்தக்
கற்பனைக் கரிதாய்க் காட்சிக் கினிதாய்
அற்புதக் கலையாய் அமைத்திவ் வுலகை
ஐவகைப் பூதமும் ஆட்சி புரிய
அருளொடு பொருள்களும் அனந்தம் வைத்து
நாதமும் இயற்கைக் கீதமும் பலவாம்
பேதமும் நாட்டிய பெருந்திறன் கண்டே
உலகில் நும்முடை உயரிய பெருமையை
உரைக்க வல்லார் ஒருவர் உளரோ?
அதுவே குறையாய் அமைந்தது நாதா!

பரமன் :— உண்மை தன்னை உரைத்தனை தேவி!
என்திறம் இயம்பிட எவரும் காணேன்!
பெருங்குறை யதனைப் பெரிதும் உணர்ந் தேன்!
படைப்பின் ஆற்றலைப் பாங்காய் நானே
பகர்ந்திடில் பயனென்? படைப்பும் வீணோ?
நினைந்திடில் குறைமிக நெஞ்சிற் பெருகுது!

தேவி :— பாரும் இனிமை! படைப்பும் இனிமை!
காட்சியும் இனிமை! காலமும் இனிமை!
துக்கமும் ஏனோ துலங்கும் இறையோய்?
தக்கநல் வழியும் தான்மிக உண்டு!

பரமன் :— என்னுடைப் படைப்பை இப்புவி யுணர
ஏற்ற வழிதனை இயம்புக தேவி!

[சக்தி தேவி உரிய வழியினைச் சாற்றுதல்.]

வேறு

தேவி :— பேராற்றல் விளங்குமிந்தப்
பிரபஞ்சம் உள்ளமட்டும்
சீராக நும்படைப்பைச்
சிந்திக்க வைத்திடுமோர்

நேரான கவிப்புலமை
நிறைந்தவொரு வாணனையே
பாரில்நும் அருளோடே
படைத்திடலாம் இனிதுடனே!

பரமன் :— நல்லதொரு வழிபுகன்றாய்!
நாட்டுமென்றன் அருளுடனே
வல்லவுன்றன் சக்தியதும்
வாய்ந்தவொரு கவிஞனையே
எல்லையில்லாக் கற்பனையும்
இனிதவனில் சார்ந்திருக்கச்
சொல்லவருந் திருவுடனே
சுபமாகப் படைத்திடுவோம்!

[தேவனும் தேவியும் சேர்ந்து தெள்ளிய கவிஞனைப் படைத்தனா. அவனே முதன் முதலாகப் படைக்கப்பட்ட ஆதி கவிஞன்!]

தேவனின் அருளொடு தேவியின் சக்தியும்
சேர்ந்திடக் கவிஞனும் சிறப்புடன்தோன்றினன்!
மேவிடும் படைப்பதின் மேன்மையைப் பாங்
மேதினி மீதினில் ஆதியில் பாடினன்! [குடன்

[உதயமாகிய ஆதி கவிஞன் படைப்பின் உயர்வைக் குறித்துப் பாடுதல்.]

கவிஞன்:—நீலவான் வெளியினையும்
நிலத்தினையும் கடலினையும்
கோலப்பொற் கதிரினையும்
குளிரொளிசெய் மதியினையும்
சீலமாய்ப் படைத்தவராா்?
சிந்தைக்கும் அப்பாலாய்க்
காலமெலாம் அண்டமெலாம்
கணக்கெல்லாம் வகுத்தவரார்?

குடங்கண்டே வனைந்தவனைக்
    கூர்ந்தமதி தெளிவதுபோல்
இடங்கண்டே எழில்கண்டே
    இணையில்லாத் திறன்கண்டே
திடங்கொண்டே அருள்கொண்டே
    தேர்ந்தொருவன் படைத்திட்ட
நடங்கண்டே உய்ந்திடுவார்
    நல்லறிவின் மாந்தர்தாம்!

புல்லாகிப் பூடாகிப்
    புழுவாகி மரமாகிக்
கல்லாகிப் புவியிதனில்
    கணக்கில்லாப் பிறப்பெய்திச்
சொல்லாகிப் பொருளாகிச்
    சூக்குமமாய் நின்ருெளிரும்
வல்லோனின் அருளுணரும்
    வழுவில்லாப் பிறப்புற்றேன்!

புதுமையெனும் குரலெழுப்பிப்
    புத்துலகைக் கண்டின்பப்
புதுமையெனும் வாழ்வுணர்த்திப்
    பொன்ஞன பாதையினில்
புதுமையெனும் இசைபாடிப்
    புறம்பான நெறியகற்றிப்
புதுமையெனும் கலைபரப்பப்
    புவனமதில் பிறப்புற்றேன்!

கவிஞனுய் வாழ்கவெனக்
    கருவதனில் திருவேற்றிப்
புவியினிலே பகுத்தறியும்
    புண்ணியமாம் பிறப்பருளித்
தவியாத மனப்பண்பும்
    தண்ணருளாம் சக்தியதும்
அவியாத பேரறிவும்
    அளித்தென்னை அனுப்பியதார்?

[இறைவனது படைப்பைக் குறித்து இங்ஙனம் ஆதி கவிஞனின் குரல் தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தது; இன்னமும் பாடிக் கொண்டிருக்கிறது; என்றென்றும் பாடிக் கொண்டிருக்கும்.]

தேவனின் அருளொடு தேவியின் சக்தியும்
சேர்ந்திடத் தோன்றிய சீரிய கவிஞனும்
ஆதியைப் பாடிடும் ஆற்றலும் பெற்றனன்!
ஆதியைப் பாடினன் ஆதி கவிஞன்!

9. வான் பறவை!

1. வானத்து வீதியிலே—ஒருபறவை
வட்டமிட்டுச் செல்லுதம்மா!
மோனத்துப் பொருளெல்லாம்—அப்பறவை
மோகனமாய்ச் சொல்லுதம்மா!

2. கானத்துக் குயில்போலே—இசைக்காத
கானமெலாம் இசைக்குதம்மா!
ஞானத்துப் பெருநிலைதான்—அதனிசையில்
நாதவடி வாகுதம்மா!

3. 'ஈனமன நினைவகற்றி—அன்புவளர்
எண்ணமலர்க் கரம்பற்றி
வானமுதம் உண்டிடவா'—என்றென்னை
வாஞ்சையுடன் அழைக்குதம்மா!

4. 'கண்ணுள்ளே மணிகலந்த—வகைபோலே
கதிர்மதியுள் கலந்திடலாம்!
விண்ணுள்ளே விளைந்திருக்கும்—பற்பலவாம்
விந்தைகளைக் கண்டிடலாம்!'

5. 'மின்னுகின்ற தாரகைகள்—அப்பாலும்
மேவுகின்ற வான்சுடர்கள்
இன்னுமுள்ள எத்தனையோ—அற்புதங்கள்
இனிதாகப் பார்த்திடலாம்!'

6. 'காணாத கண்டிடலாம்!—கேளாத
கருத்தெல்லாம் கேட்டிடலாம்!
தோணாத புதுமையெலாம்—உயர்வெளியில்
தோன்றிடவே உணர்ந்திடலாம்!'

7. 'வஞ்சகமும் ஏமாற்றும்—மண்ணான
வையத்தில்தான்' எனச்சொல்லி
நெஞ்சுருகிக் கூவுதம்மா!—கடந்துசென்று
நிலைகாண அழைக்குதம்மா!

8. இப்படியாய்க் கூப்பிடுமோர்—வான்புள்ளின்
இசைத்தேனைப் பருகிடவே
எப்படிநான் சென்றிடுவேன்?—வான்விந்தை
எப்படிநான் கண்டிடுவேன்?

9. பறவைபோல் சிறகிருந்தால்—விண்காணப்
பரிவுடனே பறந்திடுவேன்!
சிறகிரண்டு முளைத்தாலும்—அப்புள்ளின்
சித்தநிலை வேண்டாமோ?

10. சிவன்!

1. பிறப்பெடுத்த பயன்காணப்
பெருஞ்சேவை செய்கவென்று
திறமுடனே எடுத்துரைக்கும்
தெருள்மிகுந்த பெரியோரும்
அறம்நிறைந்த கவிபாடும்
அரும்புலமை அமைந்தோரும்

மறைந்தெங்கோ போகின்றார்!
மண்கண்ட உண்மையிதே!

2. நிதிகோடி படைத்தோரும்
நிலமெல்லாம் ஆள்வோரும்
மதியாட்சி புரிவோரும்
மனம்போலே திரிவோரும்
கதியின்றிப் பட்டினியாய்க்
கவலையுடன் அலைவோரும்
விதியுண்டோ என்போரும்
வீதிவழி போவாரே!

3. புனிதமிகும் அன்புநெறி
போதித்த அரும்புத்தர்
இனியனவே புரிகவென்றே
இயம்பிட்ட ஏசுவள்ளல்
கனிவுமிக்க உரைதந்த
கனம்நபிகள் பலஇன்னும்
மனிதகுலம் வாழ்விக்க
வந்தவரும் போனவரே!

4. இறந்தொருநாள் போகின்ற
இவ்வுலக வாழ்க்கையிலே
மறைவான தீச்செயல்கள்
மனம்பதைக்கும் கொடுமைகள்ஏன்?
நெறிமறந்து செருக்குற்று
நிலைமாறிப் போவதனால்
சிறந்ததொரு பயனுண்டோ?
சிந்திப்பீர் உலகீரே!

11. வள்ளியெனும் பொன்மயிலே!

1. வள்ளியெனும் பொன்மயிலே! வாழ்வின்பக் குயிலே!
வாடாத மணமலரே! வற்ருத அமுதே!
துள்ளிடுமோர் இளமானே! துங்கமிகு மதியே!
சுவையொழுகு நறுந்தேனே! தூயமணி விளக்கே!
புள்ளியெழில் மயிலேறும் புனிதவேல் குமரர்
புகழ்கின்ற செல்வமணிப் பொற்காதற் கனியே!
தெள்ளியராம் அம்முருகர் சிந்தைமிக யிரங்கித்
திருவருள இறைவீ, நீ செய்திடுவாய் துணையே!

2. காந்தமிகும் உன்விழியின் கலையமுதம் பருகிக்
களிமிஞ்ச உரையாடிக் காலத்தை மறந்தும்
ஏந்திவந்த வேல்மறந்தும் எழில்மயிலை மறந்தும்
'எனதின்ப உயிரமுதே' என்றுமிக யிரங்கிச்
சாந்தமுடன் கொஞ்சுகின்ற சமயத்தில் உனது
தலைவரவர் முருகரிடம் தயவுடன் என் குறையைப்
பாந்தமுடன் மொழிந்துமிகப் பலன்யானும்
பெறவே
பரிந்துதவி புரிந்திடுவாய் பரவள்ளிக் கொடியே!

3. முருகரது மனவானில் மோகஒளி எழுப்பும்
மோகனமே! தாரகையே! முழுமதியே! கருணை
பெருகுகின்ற உளம்படைத்த பேர்வள்ளிக்
கொடியே!
பேசுதெய்வச் சித்திரமே! பெண்ணமுதத் திருவே!
உருகிநிதம் உன்கணவர் உயர்குமர ரிடத்தே
உரைத்தகுறைக் கெப்பயனும் உற்றறியேன்!
இரங்கும்
அருமைமிகு வள்ளியெனும் அழகுருவ மயிலே!
அடியேனுக் குதவவுன்றன் ஆளரிடம்
மொழிவாய்!

4. வருத்துகின்ற வினைதவிர்த்து வறுமையிடர் களைந்து
வழிகாட்டி மேலான வாழ்வருளிப் புவியில்
விருத்தியுற எனைஉயர்த்த வேண்டுமென
மொழிந்தும்
வேதனைசெய் கொடுவஞ்ச விலங்குகளின்
செயலால்
கருத்தினிலே கலக்கமுற்ற கதைவிளம்பி யதனைக்
கருணையுடன் அகற்றியருட் கண்பார்க்க
உரைத்தும்
நிருத்தமிடும் பரன்மகனும் நினதன்பர் முருகர்
நெஞ்சினிலுற் றுரில்லை! நிதிவள்ளிக் கொடியே!

5. தேன்மொழிஉன் மொழிக்கிரங்கித் திருமுருகர்
கணத்தில்
தீர்த்திடுவார் என்குறையே! தெய்வவள்ளிக்
கொடியே!
வானமுதப் பைங்கிளியே! வடிவழகே! குமர
வடிவேலர்க் கெடுத்துரைக்கும் வகையதுசெய்
திடவே
ஞானஇசை பாடியுன்னை நானடைந்தேன்! எனது
நம்பிக்கை பலனுறஉன் நாதரிடம் உரைத்துத்
தீனனென்றன் குறைகளையச் செய்திந்த உலகிற்
சிறந்தவனாய் எனையாக்கத் திருவுளங்கொள்
வாயே!

12. "உனைத் தேடேன்!"

இராதை:- எங்கேநீ இருக்கின்றாய்?
எனையிங்கே தவிக்கவிட்டே
எங்கேநீ இருக்கின்றாய்?
எனைவாட்டும் மாயவனே!

மாயனென்று பெயர்வைத்த
மதியோரை வாழ்த்துகின்றேன்!
மாயமெலாம் விட்டுவிட்டு
மன்னவனே, வாராயோ?

குழல்கேட்ட இடமெல்லாம்
கோபியர்கள் நீராடும்
அழகுநிறை புனலெல்லாம்
ஆசையுடன் பார்த்துவிட்டேன்!

ஏமாந்து போனதல்லால்
எங்கும்நான் உனைக்காணேன்!
ஏமாந்த ராதையென்றன்
இதயநிலை உணராயோ?

கண்ணன்:-உணரவில்லை யென்றுநீ
உன்னுகின்றாய் என்றாதே!
உணர்வேன்நான்! உன்னுள்ளம்
உணர்வெல்லாம் நன்குணர்வேன்!

ஞானமெனும் பேருணர்வால்
ஞாலமெலாம் ஆட்டிவைத்துக்
கானப்பூங் குழலிசைக்கும்
கண்ணன்நான் நன்குணர்வேன்!

எங்கெங்கோ ஆவலுடன்
எனைத்தேடிச் சென்றாய்நீ!
அங்கங்கே நானிருந்தேன்!
ஆனால்நீ காணவில்லை!

காணாத உனைநானே
கண்டுகொண்டேன் என்றாதே!
வீணாய்நீ அலைந்ததல்லால்
விரைந்தபலன் கிட்டியதோ?

இராதை:- உன்உருவைக் காட்டாமல்
ஒளித்தேஏன் பேசுகின்ருய்?
உன்வடிவைக் காட்டிவந்தே
உரையாடல் புரிந்திடுவாய்!

மாதவனே! நாயகனே!
மாயவித்தை இனிவேண்டாம்!
மாதென்றன் உயிர்தங்க
வந்தென்முன் விடைபகர்வாய்!

கண்ணன்:- கண்ணே நீ உணரவில்லை!
கண்தவழும் கருமணிநீ!
கண்ணுலே தேடியநீ
கருத்தாலே தேடினேயோ?

எண்ணமெலாம் எனதாகி
இன்னுயிரும் எனதாகி
வண்ணன்எனைத் தேடிவிட்டால்
வாராதும் இருப்பேனே?

இராதை:- உரைக்கின்ற கருத்தினை நான்
உணர்கின்ற திறனில்லேன்!
உரைகடந்த உத்தமனே,
உளமறியச் சொல்லிடுவாய்!

கண்ணன்:-எனக்குள்ளே நீயிருக்கும்
இயல்பினைத் தெரிந்தேநான்
உனக்குள்ளே இருக்கின்றேன்!
உணரவில்லை நீ,ராதே!

இராதை:- கண்டுகொண்டேன் இப்போது
கண்ணுநீ யாரென்றே!
கண்டுகொண்டேன் உனையென்னுள்!
கார்வண்ணு, உனைத்தேடேன்!

13. விதிக்கணை!

பாரதப்போர் முடிந்துவிட்டது. பாரில் தான் உதித்த பயன் முடிந்துவிட்டதென்று எண்ணிக் கானகம் ஏகினன் பங்கயக் கண்ணன். அவனது ஆடிய கால்மலரைக் கண்ட வேடுவன் ஒருவன் கானகத்துப் புள்ளென்று கருதிக் கணைவிடுத்தான். பின், உண்மை அறிந்து கண்ணனிடம் வந்து பிழைபொறுக்க வேண்டி வெகுவாய் வருந்துகிறான்.

வேடன் :—

ஆடியதோர் அடிக்கமலம் அழகு பொங்கும்
அரும்புள்ளாய்த் தோற்றிடவே அறியாப் பாவி
நீடியதோர் கணைவிடுத்தே நிமலக் கண்ணா,
நெடும்பிழையே புரிந்துவிட்டேன், நீசன் யானே!

கண்ணன் :—

நின்பிழைதான் எதுவுமில்லை! நீச னென்றே
நினைத்தாழ்த்திக் கொளல்வேண்டாம்! நேயா, இந்த
மன்னுலகில் நிகழ்வதெல்லாம் மாற்ற மில்லை!
மதிக்குமப்பால் மிளிர்விதியின் மகிமை யீதே!

வேடன் :—

விண்முதலாய்ப் படைத்திட்ட விமலக் கண்ணா!
வேருக்கும் விதியினையும் விளையச் செய்த
கண்மலரோன் நீயலவோ? கனிவில் வேடன்
கணைதைக்க அதைத்தடுக்காக் கருத்தும் யாதோ?

கண்ணன் :—

கருமமுதல் ஞானநெறி கருத்தாய்ச் சொல்லிக்
கடமைதனைப் பார்த்தனுக்குக் காட்டு வித்த

தருமமுள்ளோன், விதிபடைத்தோன் தானென்
ருலும்
ணைதக்கவந்த விதிக்கணையைத் தடுத்த லற்றேன்!

வேடன் :—

வேடுவன்என் வன்கணையே விரைந்துன் பாதம்
வீழ்த்திப்புண் விளக்குமென்ற விதியும் கூற்ருய்க்
கூடுமென்று கண்டேதான் கோல வண்ணு,
கொடுங்காட்டை அடைந்தனையோ? கூறு வாயே!

கண்ணன் :—

கலிபிறந்து நலிமிகுந்த காலங் கண்டு
கானகத்தைச் சார்ந்தேன்!உன் கணையும் என்பால்
வலியவரும் என்றறிவேன்! மாற்ற மின்றி
வல்விதியும் வென்றதுவே! வாழ்க அஃதே!

14. கல்லும் கலைஞனும்!

கல்:- சுகம்அருளும் நற்பண்பும்
சுகிர்தமிகும் தயையுமுற்ற
மகிமையுறு பிறவியெனும்
மானுடநல் வடிவுற்றும்
அகமதிலே இரக்கமின்றி
அன்பின்றி வெகுவாகச்
செகமதிலே என்னுடலைச்
செதுக்குவதும் அறமாமோ?

கலைஞன்:- கருணையுளம் கொண்டவென்றன்
கருத்தினையே பின்உணர்வாய்!
கருங்கல்லாய் வளர்ந்தவுன்னைக்
காசினியோர் வியந்திடவே

பெருங்கலையின் சிலையாக்கிப்
பேசாத உன்னையென்றும்
அருமையுடன் பேசவைத்தே
அழியாத வாழ்வளிப்பேன்!

கல்:- சிற்றுளியால் எனைவெட்டிச்
சிதைக்கின்ற வேதனையைச்
சற்றுமென்னுல் தாங்குகின்ற
சக்தியில்லேன்! கதியுமில்லேன்!
மற்றும்நான் சிலையாகி
மாநிலத்தோர் பார்வையிலே
நற்றவத்துக் கலையாகி
நனிதிகழ்தல் எவ்வகையோ?

கலைஞன்:- அருங்கவிஞர் உனைக்காணின்
அகமுருகிக் கவிபாட
உருவொன்றும் இல்லாத
உன்னையொரு வடிவாக்கிப்
பெருகிவரும் உயிர்க்காந்தப்
பேரெழில்சேர் விழியமைத்துப்
பொருந்துகின்ற புகழ்சேர்ப்பேன்!
பொறுத்திடுவாய் துயர்சற்றே!

கல்:- கல்லென்றே எனைக்கருதிக்
காண்போர்கள் வெறுத்திடவும்
கல்எனையே நாடிவந்து
கலையாக்கும் நலத்தவனே!
தொல்லைதரும் துயர்பொறுத்தால்
தூயபுகழ் கிட்டுமென்னும்
எல்லையினை அறிந்துவிட்டேன்
எண்ணம்போல் வெட்டிடுவாய்!

கலைஞன்:- வண்ணமிகு சிலையாக
வையகத்தோர் உனைக்காணின்
எண்ணமதில் கல்லென்றே
எக்காலும் கொள்ளாரே!
திண்ணமுற நின்னுருவில்
திகழ்கின்ற தெய்வத்தைப்
பண்ணிசைத்துத் தலைவணங்கிப்
பரவிடுவார் எந்நாளும்!

15. உறவு!

1. விண்ணிற் பூத்த சுடர்மலராம்
வெள்ளை வண்ணப் பனிமதியும்
மண்ணிற் சேர்ந்த தடாகத்தே
வடிவம் காட்டல் உண்மையன்றோ?

2. விண்ணி னின்றும் பொழிகின்ற
வெகுவாய் விரும்பும் மாமழையை
மண்ணின் பயிரும் மிகஉண்டு
வளமாய் வளர்தல் உண்மையன்றோ?

3. விண்ணில் தோன்றும் செங்கதிரும்
மிகவே இருளை யறவோட்டி
மண்ணில் பகலைக் கூட்டிஒளி
வளத்தை யூட்டல் உண்மையன்றோ?

4. மண்ணிற் படிந்த நீரெல்லாம்
வானக் கதிரின் சூட்டாலே
விண்ணிற் சென்று பின்னுமண்ணில்
விழையு மழையாய் வருகுதன்றோ?

5. விண்ணும் மண்ணும் கொண்டுள்ள
மேலாம் உறவி னுலன்ருே
எண்ணிப் பார்க்கும் அளவினிலே
இந்த வையம் வாழுதம்மா!

6. விண்,மண் கொண்ட பேருறவை
வியன்மண்டலந்தான்உணர்ந்துவிட்டால்
மண்ணிற் பேசும் பிரிவினேயும்
வளர இடம்தான் ஏதுமுண்டோ?

வேறு

1. உலகமெல்லாம் உறவாக்கும் உணர்வைக்
கொண்டால்
உயிரிலெல்லாம் நிறைகாணும் உளத்தைக்
கொண்டால்
கலகமெல்லாம் விளைக்கின்ற கட்சி யேது?
கலக்கமதை யூட்டுகின்ற காட்சி யேது?
விலகலின்றி வெறுப்பின்றி வெம்மை யின்றி
வீழ்த்துமெண்ணம் சற்றுமின்றி விரிந்த அன்பால்
இலகுமிந்த நிலமெல்லாம் என்றும் ஒன்ருய்
எண்ணுகின்ற நிலைபெற்ருல் ஏத மேதோ?

2. பள்ளமின்றி மனநிலத்தைப் பண்ப டுத்திப்
பகுத்தறிவு நீர்பாய்ச்சிப் பயிர்செய் திட்டால்
தெள்ளியமெய்க் கதிர்வாழ்வின் தேன்சு கத்தைத்
தினம்துய்க்க லாமன்ருே? தேச மெல்லாம்
உள்ளவொன்ருய்க் கருதுகின்ற உயிர்நே சத்தால்
உலகினர்கள் அனைவருடன் உறவு பூணும்
விள்ளற்கே அரிதான மேன்மை சேர்ந்து
வேற்றுமையே அற்றநிலை விளையு மன்ருே?

16. உதயம்!

1. இதயத்தை மையாக்கி
எண்ணத்தைக் கோலாக்கி
உதயத்தைப் பொருளாக்கி
உணர்வெளியில் எழுந்துநின்றேன்!

2. கருமைநிறக் கொடுமாயக்
காரியெனும் கங்குலினுள்
பெருமைஇனி இல்லையென்றே
பேசாமல் மறைந்தகன்ருள்!

3. செங்கதிர்சேர் அன்பனைஉட்
சிந்தையிலே வைத்துருகும்
செங்கமலம் இதழ்விரித்துச்
செல்வமுகம் மலர்த்திநின்ருள்!

4. திங்கில்லாச் செவ்வண்ணத்
திருவிளங்கும் சேவலினம்
ஓங்கிநின்று கூவிற்றே!
ஓம்ஒலியும் மேவிற்றே!

5. காகமுதற் புள்ளினங்கள்
கனவுலகை விட்டெழவே
தாகமொடு பாடினவே!
தனியூக்கம் கூட்டினவே!

6. கோலமிகும் உதயஒளிக்
குமரியவள் புன்னகைத்துச்
சீலநடை பொருந்தவந்தாள்!
செழுங்காலை வளம்தந்தாள்!

7. விடிவெள்ளி முளைத்துப்பின்
விண்கதிரும் சுடர்வீச
மடிமைதவிர் பூமடந்தை
வாழ்வழியை இசைத்துநின்ருள்!

8. உதயத்தின் காட்சியெலாம்
உணர்வுடனே வரைந்தநான்
இதயத்தின் மையிருள்தான்
என்றகலும் எனச்சமைந்தேன்!

17. உயர்வு!

1. இருளில் ஒளியும் உண்டே!— அந்த
இருளில் இருளும் உண்டே!
இருளில் ஒளியைக் காணில்—உலகில்
இடர்தான் உண்டோ கிளியே?

2. கனியில் இனிப்பும் உண்டே!—அந்தக்
கனியில் கசப்பும் உண்டே!
கனியில் இனிப்பைக் காணில்—நெஞ்சக்
கவலை யுண்டோ கிளியே?

3. மதியில் நிறைவும் உண்டே!— அந்த
மதியில் குறைவும் உண்டே!
மதியில் நிறைவைக் காணில்—சித்த
மயக்கம் உண்டோ கிளியே?

4. மலரில் மணமும் உண்டே!—அந்த
மலரில் இன்மை உண்டே!
மலரில் மணத்தைக் காணில்—மனத்தில்
மாற்றம் உண்டோ கிளியே?

5. நெல்லில் மணியும் உண்டே!—அந்த
நெல்லில் பதரும் உண்டே!
நெல்லில் மணியைக் காணில்—மருட்சி
நிலைப்ப துண்டோ கிளியே?

6. கடலில் முத்தும் உண்டே!—அந்தக்
கடலில் நத்தை உண்டே!
கடலில் முத்தைக் காணில்—உள்ளக்
கலக்கம் உண்டோ கிளியே?

7. மண்ணில் பொன்னும் உண்டே!—அந்த
மண்ணில் கரியும் உண்டே!
மண்ணில் பொன்னைக் காணில்—சிந்தை
வாட்டம் உண்டோ கிளியே?

8. சிரிப்பில் தூய்மை உண்டே!—அந்தச்
சிரிப்பில் கபடம் உண்டே!
சிரிப்பில் தூய்மை காணில்—வருத்தும்
சிறுமை உண்டோ கிளியே?

9. அன்பில் இன்பம் உண்டே!—அந்த
அன்பில் துன்பம் உண்டே!
அன்பில் இன்பம் காணில்—எங்கும்
அயர்ச்சி உண்டோ கிளியே?

10. ஒளியில் ஒளியும் உண்டே!—அந்த
ஒளியில் இருளும் உண்டே!
ஒளியில் ஒளியைக் காணில்—வேறோர்
உயர்வும் உண்டோ கிளியே?

18. பூவினுக்கோர் அருங்கலமே!

1. பூவினுக்கோர் அருங்கலமே! பொங்குமெழில்
தாமரையே! புலவோர் பாடும்
பாவினுக்கோர் கற்பனையே! பாவையர்தம்
கைக்குவமை பகர நின்று
காவியச்சீர் பெறுமலரே! கடந்திட்டோர்
உள்ளமெனும் கமல மாகப்
பாவிக்க வரும்வடிவே! பரந்திட்ட
தடாகமதிற் படர்கின் றுயே!

2. காரிருளாம் அரக்கியும்நீ கண்விழித்தே
இதழ்விரித்தால் கலங்கி ஓடிப்
பாரினிலே மறைந்திடுவாள்! பகலவனும்
நீமலரும் பாங்கைக் கண்டு
பேருள்ளம் மகிழ்ந்திடுவான்! பெருகுமொளி
கூட்டியிருட் பீடை யோட்டும்
சீருள்ள கலைப்பூவே! செகத்தோர்தம்
மனமலர்த்தித் திகழ்விப் பாயே!

3. செந்திருவாள் உறைவாள்உன் செவ்வண்ணஞ்
சேரிதழில்! சிறந்த வாணி
விந்தையுடன் தங்குவதுன் வெண்ணிறத்து
நல்லிதழில்! விளங்கு செல்வச்
சுந்தரியாம் திருமகளும் சுகஞானக்
கலைமகளும் சுகிர்த மோங்கும்
சிந்தைநலம் கொண்டென்றும் சேர்ந்துன்பால்
மிளிர்வதனுல் சிறப்புற் றுயே!

4. மண்ணகத்துத் தடாகமதில் மணம்வீசி
மலர்ந்தஉன்னை வகையாய்க் கண்டால்
விண்ணகத்தே ஒளிவீசி விளங்குசுடர்த்
தாரகைகள் விந்தை யாக

மண்ணகத்துத் தடாகமதில் மலர்ந்தனவோ
எனயெண்ணி மனமும் காணும்
வண்ணமிகுங் கற்பனையே! வாழ்விலொளி
சேர்ப்பதனுல் வளம்பெற் ருயே!

5. இருளகற்ற மலர்கின்ருய்! இரவிதனை
வரவேற்றே இன்பம் நல்கும்
அருளொளியே சேர்க்கின்ருய்! அகிலமெலாம்
உன்செயலால் அழகு பூணும்!
மருள்சூழ்ந்தே இருள்கவ்வும் மனம்உன்போல்
மொட்டவிழ வழியே காட்டும்
தெருள்மேவு தாமரையே! தெரிந்துன்னைப்
போற்றிடுவோர் தெளிவுற் ருேரே!

19. ‘தை’ மகள்!

1. பொன்னிறத்துச் செழுங்கதிரும் பூங்க ரும்பும்
பொற்புடனே ஏந்திவந்து புதுமை யான
இன்னிசைதான் செவிகொள்ள எதிரே நிற்பாள்!
‘இனியதமிழ்த் தைமகள்நான்’ எனந வில்வாள்!

2. ‘அற்புதமாய் ஒளிச்சுடரை அள்ளி வீசும்
அருங்கதிரோன் தெற்கினின்றும் அருள்வ டக்காம்
நற்புதிய திசைக்கேகும் நாளில் வந்தேன்!
நற்காலம் பிறந்த’தென்றே நன்கு ரைப்பாள்!

3. ‘சீர்புனைந்த கதிர்,கரும்பின் சிறப்ப றிந்தே
செழுஞ்சுவைசேர் பொங்கலினைச்செய்தே இந்தப்
பார்புரக்கும் கதிரினுக்குப் பக்தி யன்பால்
படைத்துண்டு வாழ்க’வென்றே பாட்டிற்
சொல்வாள்!

4. கரும்புமொழி படைத்திடும்'தை'க் கன்னி தானும்
கதிர்,இஞ்சி மஞ்சளினைக் காட்டி நின்றே
அரும்பொங்கற் பண்ணிசைத்தே 'ஆரம் பம்தான்
அரியபுது வாழ்'வென்றே அழகாய்ச் சொல்வாள்!

5. ஆக்கமதை நீக்கமற அளிக்கச் செய்யும்
அழகுத்'தை' அணங்கவளின் அருஞ்சொற்பேணி
ஊக்கமுடன் பணிசெய்வோம்! உவகை பொங்கும்
ஒப்பில்லாப் புதுஉலகம் ஓங்கக் காண்போம்!

6. கதிர்,கரும்பு மேவிடும்'தைக்' கன்னி தன்னைக்
கனிதமிழில் வரவேற்போம்! கடமை செய்து
புதியதொரு விதியமைத்தே புனித வாழ்வு
புகழுடனே வாழ்ந்திடவே பொங்க லென்போம்!

20. கண்டவர்!

1. சுந்தரமார் ஒளிவீசி—உலகைச்
சுடர்மயமாய் ஆக்குவிக்கும்
சந்திரனின் மண்டலத்தைக்—காண்பார்
தம்மைத்தாம் காண்பாரா?

2. செவ்வாயின் நாட்டினுக்குச்—சென்று
செம்மைநலம் கண்டிடுவார்
ஒவ்வாதே அலைந்தழியும்—சிந்தை
ஒடுங்கவழி காண்பாரா?

3. சுக்கிரனின் எல்லைக்குச்—சென்று
சுகக்கோளைப் பார்த்திடுவார்
வக்கிரம்செய் ஆணவப்பேய்—அடங்க
வழியாதும் காண்பாரா?

4. கதிரினையும் அடைந்திடவே—நெஞ்சிற்
கங்கணமே பூண்டிடுவார்
மதிமயங்கா திருந்திடுமோர்—உறுதி
மனநிலையே காண்பாரா?

5. வான்கோள்கள் கண்டாலும்—இந்த
வையப்பொருள்கள் கண்டாலும்
ஊன்மேவும் உளம்படியக்—கண்டார்
உயிரொளியைக் கண்டவராம்!

21. பாவலனைப் பரவுவமே!

1. ‘அகரமுதல்’ எனஉலகை
ஆக்கியவன் தனக்குவமை
புகன்றதிரு வள்ளுவனைப்
பொய்யாத பொதுமறையாம்
தகவுடைய குறளமுதைத்
தரணியுய்யத் தந்தவனை
இகமதிலே போற்றிஅவன்
இருதாளைப் பரவுவமே!

2. ஆமைபோல் ஐந்தடக்கி
ஆசைதரும் புலனைவென்று
தூமனத்தால் மாசின்றித்
துலங்குநெறி யளித்தவனைப்
பூமகளைப் போல்,இகழ்வார்
புன்மையெல்லாம் மிகப்பொறுத்துச்
சேமமுறச் சொன்னவனைச்
சென்னிவைத்துப் பரவுவமே!

3. இசையென்னும் எச்சமுடன்
எஞ்ஞான்றும் வாழுமொரு
வசையகன்ற அறவழியை
வாய்த்தபொருள் இன்பமதைத்
திசைமுழுதும் ஏற்குவண்ணம்
திருக்குறளாம் உயர்நூலை
அசைவில்லாப் பேரறிவால்
அளித்தவனைப் பரவுவமே!

4. ஈரடிசேர் வெண்பாவால்
ஈடில்லாக் குறளியற்றிப்
பாரனைத்தும் வியக்குவண்ணம்
பல்லறமும் பகர்ந்தவனை
'ஆரொருவர் குறளினைப்போல்
ஆக்கவல்லார்? எவருமிலை
பாரினிலே!' எனும்புகழ்சேர்
பாவலனைப் பரவுவமே!

5. உள்ளத்தால் பொய்யாமல்
ஒழுகிடவும், நெஞ்சினிலே
உள்ளுவதெல் லாம்உயர்வாய்
உற்றிடவும் உரைத்தவனை
விள்ளுகின்ற துறவறத்தின்
மேன்மையினை இல்மாண்பைத்
தெள்ளுதமிழ் தனில்மொழிந்த
திருவினனைப் பரவுவமே!

6. ஊழினும்ஓர் வலியில்லை
ஊழ்வந்து முந்துமென்றும்
ஊழையும்உப் பக்கத்தில்
உறக்காண லாமென்றும்
ஆழியற அந்தணன்தாள்
அடைந்தார்க்கு மற்ற,பிற
ஆழியெல்லாம் இலகுவென்றும்
அறைந்தவனைப் பரவுவமே!

7. எப்பொருளிலும் மெய்ப்பொருளை
இனிதாகக் காண்பதுவே
ஒப்பில்லா அறிவென்றும்
உயிரினும்மேல் ஒழுக்கமென்றும்
செப்பியசெந் நாமகனைச்
'சினங்காக்க நாகாக்க
இப்புவியில்' என்றவனை
ஏற்றிமிகப் பரவுவமே!

8. ஏதமின்றிக் கற்றபடி
எந்நாளும் நிற்கவென்று
போதித்த கவியரசைப்
புரிந்தின்னு செய்தார்க்கும்
காதலுடன் இனியனவே
கருத்தொப்பிச் செய்கவென்று
நீதமுடன் மொழிந்தவனை
நினைவுடனே பரவுவமே!

9. ஒருநாடும் நூலிதுபோல்
உண்டாக்க வில்லையென்ற
பெருமையினைத் தமிழ்நாட்டார்
பெறும்வண்ணம் செய்தவனை
இருவினைசே ராப்பரனை
எவ்விருப்பும் எவ்வெறுப்பும்
கருதானைச் சேர்கவென்ற
கலையினனைப் பரவுவமே!

10. ஓதிடும்மா மறையனைத்தும்
உணர்த்துவதை உரைத்தவனைச்
சாதிமத பேதமெல்லாம்
சாற்றுவதைக் கடந்தவனை
மோதிடுமோர் கொடுவெகுளி
மோகமெல்லாம் அறக்களையப்
போதித்த வள்ளுவனும்
புண்ணியனைப் பரவுவமே!

22. தமிழ் நிதி!

1. கற்பெனும் சீருடையாள்!—வீரக்
கண்ணகிப் பேருடையாள்!
பொற்புறும் பெண்ணினத்தின்!—தீரப்
புகழினை உயர்த்தவந்தாள்!

2. பாண்டியன் பேரவையில்—சிலம்பால்
பண்பறம் நாட்டிவிட்டாள்!
மாண்புயர் கண்ணகியாள்—அவளின்
மகிமையைப் பகர்ந்தவரார்?

3. 'அறமது தவறிவிட்டால்—அந்த
அறமதும் கூற்றுகும்!'
திறமுடன் உண்மையிதைப்—பாடித்
தெளிவினைக் காட்டியதார்?

4. அரசினைத் துறந்துவிட்டு—ஞான
அறிவினிற் சிறந்தோங்கிச்
சுரந்திடும் இன்கவியால்—தமிழிற்
சொன்னநல் இளங்கோவாம்!

5. சிலப்பதி காரமெனும்—இனிய
செழுந்தமிழ் அமிழ்தளித்த
நலம்பதி இளங்கோவின்—பனுவல்
நற்றமிழ் நிதியாகும்!

23. இறவாத உத்தமன்!

1. கோதற்ற அகிம்சையெனும் கொள்கை யாலே
குணஅன்பும் சத்தியமும் கொண்ட தாலே
தீதுற்ற தீண்டாமை தீர்த்த தாலே
செப்புமொழி செயலுமொன்ருய்ச் சேர்ந்த
தாலே
நீதமுற்ற அறநெறியில் நின்ற தாலே
நித்தியமெய்த் தவவாழ்வை நினைத்த தாலே
ஆதவனுய் ஒளிவீசும் அமர ஞன
அருங்காந்தி புண்ணியனை அகத்திற் சேர்ப்
போம்!

2. துறந்துசுகந்தனைமறந்துதொண்டேநோக்காய்த்
தூயசத்யாக் கிரகமதைத் தொடர்ந்த
தாலே
அறந்தழைக்கும் சீர்வழியே அகிலம் போற்ற
ஆனந்த சுதந்திரத்தை அடைந்த தாலே
பிறந்தநிலத் தாயுற்ற பெருவி லங்காம்
பேரடிமை தனையறுத்த பெருமை யாலே
இறந்தும்என்றும் இறவாதே இலங்கு கின்ற
எழில்காந்தி உத்தமனை இதயஞ் சேர்ப்
போம்!

24. அஞ்ஞான இருளகற்றும் அருணன்!

1. மனிதகுலம் புனிதமுறும் மார்க்கம் காட்டி
மாண்பான அன்பாலே மருளை யோட்டித்
தனித்தவமும் பெருந்தயையும் தங்கும் சித்தன்!
தரணியுய்ய அருளுருவாய்த் தழைத்த
புத்தன்!

2. அஞ்ஞான இருளகற்றும் அருண னுவன்!
ஆசியத்தின் சுடர்விளக்காய் ஆன தேவன்!
மெய்ஞ்ஞானம் தரவந்த மென்மைப் பாதன்!
மிருகருணைப் புத்தனெனனும் மேன்மை
நாதன்!

3. மனைமகனைப் பேரரசை மறந்த மூர்த்தி!
மாநிலத்தில் முழங்குதவன்மகிமைக் கீர்த்தி!
வினையெல்லாம் நல்வினையாய் விளைய வேண்டும்
வித்தகனும் புத்தனுரை விளங்கும் யாண்டும்!

4. பிணிமூப்பால் பசிசாவால் பெருகும் துன்பம்
பெரிதுமறப் புத்தநெறி பேண இன்பம்!
மணிவழியாம் அகிம்சைதனை மகிழ்வாய்க்
கொண்டு
மனஒளியாற் புரிந்திடுவோம் மணமார்
தொண்டு!

5. பாழ்நல்கும் ஆசையெனும் பாச மற்றுப்
பண்பான சோதியருட் பாதை யுற்று
வாழ்ந்திடுவோம் புத்தவழி வளமாய்ச் சென்று!
வணங்கிடுவோம் புத்தனடி வாழ்த்தி நின்று!

25. பாரதியின் பாதையிலே!

1. கவிப்புதுமை செய்தபெருங்
கவிஞனெனப் பேர்வாய்ந்து
தவத்தமிழின் சுவைபிழிந்து
தண்ணமுதக் குயிற்கவியும்
புவியிடையே நேர்கொண்ட
புதுமைப்பெண் சக்தியதும்
நவமிகுந்த பாரதமும்
நனிபடைத்தான் பாரதியே!

2. காக்கையொடும் குருவியொடும்
கலந்துறவு கொண்டதுடன்
நோக்குமெந்தப் பொருளிலுமே
நுண்கண்ணன் தனைக்கண்டும்
வாக்கொளிக்குக் காரணம்மெய்
வாய்ந்தஉள்ளத் தொளியென்றும்
பாக்களினைத் தேனாகப்
பாடியவன் பாரதியே!

3. 'எல்லாரும் ஓர்நிறையே
எல்லாரும் ஓர்இனமே
எல்லாரும் ஓர் விலையே'
என்னுமிந்தச் சமஉணர்வை
எல்லாருள் ளத்துள்ளும்
இனிதாகப் பாய்ச்சியவன்
எல்லாரும் போற்றிடுமோர்
இசைக்கவிஞன் பாரதியே!

4. சுதந்திரமாம் கனல்மூட்டிச்
சோர்வகற்றி விழிப்பூட்டும்
பதங்களுறும் பாட்டியற்றிப்
பாத்திறத்தால் மக்களிடை

இதமளிக்கும் விடுதலையின்
எழுச்சியினைத் தோற்றுவித்தான்
முதன்மையுற்ற கவிச்சுடராய்
முகிழ்த்திடுமோர் பாரதியே!

5. சித்தத்தே சிவம்நாடிச்
சிவசக்தி அம்மையிடம்
மெத்தயிந்த மாநிலமே
மேன்மைமிகு பயனுறச்செய்
வித்தகநல் வல்லமையை
வேண்டிநின்றான் எஞ்ஞான்றும்
சத்தியத்தின் வழிவந்த
தருமகவி பாரதியே!

6. பாரதியின் பாதையிலே
பண்மணக்கும் பாவினிலே
பாரதத்தின் ஒளிவிளக்காம்
பார்போற்றும் காந்திநெறி
பூரணமாய்ப் பொலிவதனைப்
புனிதமுடன் கண்டிடுவோம்!
திரமுடன் ஒன்றுபட்ட
சீர்வாழ்வு கொண்டிடுவோம்!

26. "வான் காண்பேன்!"

கிரேக்க நாட்டு மாஞானி சோக்ரதர் (சாக்ரட்டீசு) கீழான நச்செண்ணத்தோரால் பாழான நஞ்சுண்டு உயிர் துறக்கும் தண்டனை பெறுகிறார். நஞ்சு தந்து தண்டனை நிறைவேற்றப்படும் நாள் வருகிறது. அந்நாளில் மிக்க மலர்ந்த முகத்துடன் காணப்படுகிறார் சோக்ரதர். அவரிடம் நஞ்சுண்ணும் முறையைத் தெரிவித்துச் செல்ல சிறைக்காவலன் வருகிறான். அவனிடம் நஞ்சுண்ணும்

விதத்தை அறிந்துகொள்ளுகிறார் சோக்ரதர். பின்னர், அங்கு வந்த அதே சிறைக் காவலனிடம் நஞ்சைக் கொண்டுவரும் படி கேட்கிறார். தண்டனை நிறைவேற்றப்படும் வேளை வரவோ இன்னும் சில நாழிகைகள் உள்ளன. அங்ஙன மிருந்தும் முன்னதாகவே நஞ்சைக் கொண்டு வரும்படி கூறிய சோக்ரதருக்கும், அந்தச் சிறைக் காவலனுக்கும் அங்கு நிகழ்ந்ததாக யூகிக்கும் உரையாடல் சற்றுக் கற்பனை யுடன் கவிதையாக இங்கு உருப்பெறுகிறது.

சோக்ரதர் :—

சிறைகாத்தும் எனைக்காத்தும் சேவை செய்யும்
சிறப்புடையாய்! அன்புடையாய்! சென்று நீயும்
முறைசொன்னோர் மொழிவழியே முடிக்கும் நஞ்சை
முகமலர்ந்து நான்பருக முன்கொ ணர்வாய்!

சிறைக்காவலன் :—

பொறியழித்துத் தெளிவான புலன ழித்துப்
புவிவாழ்வை முடிக்கவரும் பொல்லாச் சாவை
அறமின்றித் தரும்நஞ்சை அவாவிக் கேட்கும்
அண்ணல்உம்போல் எவருமிலர்! அரிய பண்பீர்!

சோக்ரதர் :—

கொல்லுகின்ற குணமொன்றே கொண்ட நஞ்சு
கொன்றுகொண்டே இருக்கின்ற கொடியர் தம்மின்
நல்லதென்றே உரைத்திடுவேன்! நஞ்சை யுண்டு
நான்வந்த வழிசெல்வேன்! நல்கு வாயே!

சிறைக்காவலன் :—

வஞ்சத்தை உள்ளிருத்தி வைய மீதில்
வாய்மையுற்றோர் போல்நடித்து மாறு செய்யும்
நெஞ்சற்ற கயவரினும் நிமிடந் தன்னில்
நீளுயிரைப் போக்குநஞ்சு நிறைவென் கின்றீர்!

சோக்ரதர் :—

மெய்யேயாம்! மெய்யுடையாய், மிக்க சூது
மேவியநாட் டாட்சியினும் மேன்மை யற்ற
பொய்யேசேர் மக்களினும் புன்மை நஞ்சு
புனிதமிக வுற்றதென்பேன்! புரிந்து கொள்வாய்!

சிறைக்காவலன்:—

நஞ்சளிக்கும் நேரமின்னம் நணியி ருந்தும்
நஞ்சுண்ண விரைகின்ற நல்லீர்! மற்ற
நஞ்சுண்டு மடிவோர், தம் நாட்டம் போலே
நானிலத்துச் சுகந்துய்க்கும் நலங்கா ணீரோ?

சோக்ரதர்:—

அழிகின்ற நிச்சயத்தை அறிந்த பின்னும்
ஆசைகளைத் துய்ப்பதனுல் ஆவ தென்ன?
இழிகின்ற உலகிலின்னம் இருப்ப தாலே
எய்துகின்ற பலனுமென்ன? ஈவாய் நஞ்சே!

சிறைக்காவலன்:—

மரணத்தைத் தழுவுவதால் மண்வி யக்கும்
மாப்புகழைப் பெற்றிடுமோர் மாத வத்தோய்!
மரணநஞ்சைத் தரஎன்றன் மனங்க லங்கி
வருந்திடினும் கடனாற்றும் வகைகொண் டேனே!

சோக்ரதர்:—

உளமுவந்தே உன்கடனை உடனே செய்வாய்!
உயர்ந்தசிறைக் காவலன்போய், உயிரைப்
போக்கும்
வளங்கொண்ட நஞ்சுண்டு வையந் தீர்ந்தே
வாழ்த்திளை வரவேற்கும் வான்காண் பேனே!

27. யாரறிவார்?

1. எழில்நிலவின் முன்னிலையில்
இசைபாடிக் கரங்கோத்துப்
பொழிலிடையில் குலவியதைப்
பொன்மயிலே, யாரறிவார்?

2. காலமெனும் நினைவிழந்து
கருத்திரண்டும் கலந்தொன்றாய்க்
கோலமிகும் புவிமறந்து
குலவியதை யாரறிவார்?

3. வானத்து மதியறியும்!
வண்டாரும் பொழிலறியும்!
தேனுதிர்க்கும் மலரறியும்!
தென்காற்றும் நன்கறியும்!

4. நீயறிவாய்! நானறிவேன்!
நிலமகளும் தானறிவாள்!
தேயத்தார் அறியும்நாள்
திருநாளாம்! மணநாளாம்!

28. மங்கை!

1. மங்கை, உன்னை மலரென்பார்!
மதியை மயக்கும் மதுவென்பார்!
பொங்கிப் பாயும் புனலென்பார்!
புரிய முடியாப் புதிரென்பார்!
திங்கள் உனது முகமென்பார்!
தெளிவு காட்டும் கலையென்பார்!
தங்கி நெஞ்சில் அலைபாய்ச்சும்
தன்மை யுடையாய் என்பாரே!

2. பெண்ணே, உன்னைக் கனவென்பார்!
பேசுங் கிளியென் பார்!உன்றன்
கண்ணின் விழியோ கயலென்பார்!
கனிந்த மொழியோ பாகென்பார்!
வண்ண இடையோ மின்னலென்பார்!
வயங்கு நடையோ அன்னமென்பார்!
உண்ணும் சுவைத்தேன் கனியாகி
உளத்தில் இனிப்பாய் என்பாரே!

3. குழந்தைப் பெண்ணு கிப்பின்னர்
குமரி யாகி மணம்புரிந்து
தழுவி யணைக்கும் சேயீன்று
தாயே யாகும் பேறுற்று
வழுவில் லாமல் இல்லறத்தை
வளர்க்கும் தெய்வம் நீயென்பார்!
அழகுப் பதும நிதியே! உன்
அருமை பெருமை சொலத்தரமோ?

4. இன்பத் திற்கோர் உறைவிடம்நீ!
இனிய இசைக்கோர் எழில்யாழ்நீ!
துன்பத் திற்கோர் மருந்துநீ!
தூய சக்திக் கோர்பொருள்நீ!
அன்பிற் கோர்மெய் வடிவம்நீ!
அகத்தை யிழுக்கும் காந்தம்நீ!
வன்பு காணுப் பாவை,யிந்த
வையம் உனக்கே அடிமையன்றோ?

5. நீலம் வானில் இணைந்தாற்போல்
நீயும் வாழ்விற் கலந்துவிட்டாய்!
கோலத் திருவே, அருளணங்கே,
கூடுங் காதல் விளைக்கின்றாய்!

சீலம் மிகுந்த ஆணுக்கோர்
செழுமை நல்கப் புவிவந்தாய்!
ஆலும் அரசும் போல்தழைப்பாய்!
ஆசைக் கொழுந்தே, வாழியவே!

29. இன்பம்!

1. கண்ணும் கண்ணும் இணைந்தது!
கருத்தும் கருத்தும் பிணைந்தது!
எண்ணம் ஒன்றே யானது!
இரண்டே இல்லை யானது!

2. கனிந்த ஆசை வளர்ந்தது!
காதல் எனவே மலர்ந்தது!
இனிப்பு வாழ்வில் புகுந்தது!
இதய மகிழ்வைத் தந்தது!

3. மண்ணும் விண்ணும் மறந்தது!
மயக்கம் வெகுவாய்ப் பிறந்தது!
பண்ணும் இசையும் ஒலித்தது!
பழமும் பாலும் இனித்தது!

4. நிலவு நெஞ்சை அழைத்தது!
நினைவில் இனிமை தழைத்தது!
மலரில் புதுமை மணந்தது!
மருவும் தாபம் கொணர்ந்தது!

5. கானக் குயிலும் இசைத்தது!
கனவின் உலகை அசைத்தது!
மோன நிலையும் உதித்தது!
முத்த உணர்வைப் பதித்தது!

6. வீசும் தென்றல் தவழ்ந்தது!
விந்தைக் கூடல் நிகழ்ந்தது!
பேசும் காதற் சுவையினைப்
பேசப் பேச இன்பமே!

30. நெஞ்சில் எழுதிப் பார்க்கின்றேன்!

1. கனிந்த மதியின் வரவுகண்டு
கடலின் தெய்வம் உளம்பொங்கி
இனிய அலையால் இசையெழுப்பி
எழிலார் நடஞ்செய் காட்சியினைத்
தனிமை நிலையில் எனைமறந்து
தரணி மறந்து சுவைத்திடுங்கால்
பனியின் மலர்போல் மணம்வீசிப்
பாவை, நீவந் தாயன்றோ?

2. வானத் தழகி மேனகையோ
வடிவார் அரம்பை யோவென்று
மோனத் திருந்த நான்வியக்க
மோக மலரைக் காட்டிநின்றாய்!
வானத் துறையும் மகளிரெலாம்
வனப்பின் வடிவம் உனக்கீடோ?
ஞானம் படைத்தோர் உனைக்கண்டால்
நன்றிவ் விதமே உரைப்பரன்றோ?

3. பொலியும் முத்துப் பொன்னகையே!
பூத்துக் குலுங்கும் பூங்கொடியே!
சலிப்பில் லாமல் ஆடுமயிற்
சாய லுடைய பெண்ணமுதே!
நலிவில் லாத கற்பனைகள்
நாலு கோடி மனத்தெழுப்பி

நலஞ்சேர் கவிபா டும்உணர்வை
நல்கும் உனக்கு நிகருமுண்டோ?

4. குமுதம் உனது வாயென்பேன்!
குளிர்ந்த கடல்உன் இதயமென்பேன்!
அமுதம் உனது பார்வையென்பேன்!
அரும்புஞ் சிரிப்பு முல்லையென்பேன்!
அமையும் இந்த ஏற்றமெல்லாம்
அன்பே, உனக்கே உரைப்பதனுல்
கமழும் மணம்நீ பெற்றுவிட்டாய்!
கருத்தில் என்றும் ஒன்றிவிட்டாய்!

5. அலைகள் எழும்பும் கடற்கரையில்
அழகின் உருவாய்த் தோன்றியநீ
அலையை இதயக் கடல்தனிலே
அடுக்காய் எழுப்பிச் சென்றுவிட்ட
நிலையை நினைத்துப் பார்க்கின்றேன்!
நெஞ்சில் எழுதிப் பார்க்கின்றேன்!
கலையின் அணங்கே! எனதாசைக்
கனவை நனவாக் கிடுவாயே!

31. பேறு!

பயிர்:— "சோ"வென்றே இசைபாடிச்
சொகுசாக எனைத்தழுவி
மாமுத்தம் பொழிகின்ற
வான்மழையே! வாராயோ?

மழை:— எண்ணமதில் இனிக்கின்ற
என்னுயிரே, வந்துவிட்டேன்!
வண்ணமிகும் பயிர்ப்பெண்ணே!
வாட்டமுகம் கொண்டதுமேன்?

பயிர்:— "வாராயோ" என்றுன்னை
வாயாரப் பன்முறையும்
சீராக அழைத்தவென்றன்
சித்தநிலை அறிந்திலையோ?

மழை:— கரைந்துருகி முகங்கருகில்
காதலுமே உண்மையெனத்
தெரிந்திடலாம் என்றேதான்
திகைக்கவைத்துப் பின்வந்தேன்!

பயிர்:— சோதனையும் இனிவேண்டாம்!
சொந்தமுடன் மிகக்களித்துக்
காதலெனும் உறவாலே
கதிர்மணியாம் பேறுறுவோம்!

32. ஒருமை உலகம்!

1. கண்ணுக் கினிய காட்சிகளும்
கருத்துக் கினிய மாட்சிகளும்
விண்ணுக் கினிய கதிர்மதியும்
வீட்டுக் கினிய நன்மனையும்
பண்ணுக் கினிய இசைப்பாட்டும்
பாட்டுக் கினிய சுவைப்பொருளும்
எண்ணுக் கினிய கலைவகையும்
இணைந்த உலகு நமக்கன்றோ?

2. நமக்கிவ் வுலகு சொந்தமென்ற
நாட்டம் தோன்றும் போதினிலே
நமது நாடு நமதுமொழி
நமது மக்கள் நமதுகலை

நமது மரபு நமதுநெறி
நமது வாழ்வென் றிடும்எண்ணம்
அமைந்து யாவும் நமதாகி
அன்பும் உறவும் பெருகுமன்றே?

3. பெருகும் உறவால் பேதமில்லை!
பிணக்கும் வழக்கும் பிரிவுமில்லை!
மருவும் உடலில் உயிர்போன்று
வையத் திடைநாம் இணைந்தொன்றாய்
இருக்கும் நிலையைத் தெளிந்திடுங்கால்
என்றே மாயும் உலகிடத்தும்
அரும்பும் நேசங் கொண்டிடவே
அரிய உணர்வும் உதிக்குமன்றே?

4. உதிக்கும் பரந்த உணர்வாலே
உலகத் துயிரை ஒருநிறையாய்
மதிக்கும் ஞானம் வருமன்றே?
மண்ணும் விண்ணும் உறவுகொள்ளும்
கதியைக் காணும் மெய்யறிவால்
காட்சி, புவனம், உறவுமற்றும்
விதிசெய் இறையும் விளங்குமன்றே?
மேன்மை வழியும் துலங்குமன்றே?

5. துலங்குந் தூய வழிகண்டு
தொடர்பு கொண்டிவ் வுலகினிலே
இலங்கும் அன்புத் தொண்டியற்றி
இந்தப் புவியிற் பிறந்தபெரும்
பலனை அடையச் செயுங்கலையைப்
பாரில் மலரச் செய்தென்றும்
நலஞ்செய் புதிய மலர்ச்சியினை
நாட்ட முடனே கொணர்வோமே!

6. கொணரும் புதிய மலர்ச்சியினால்
கோதில் லாத சமுதாயம்

குணமும் மணமும் புதுப்பொலிவும்
கொண்டு வடிவும் பெறக்காண்போம்!
மணத்தை மலரில் காண்பதுபோல்
வயங்கு விண்ணை மணிற்காண்போம்!
உணர்வுக் கோலைக் கைப்பிடித்தே
ஒருமை உலகைக் காணுவமே!

7. காணும் ஒருமை உலகினிலே
கட்சிக் கிடமும் இல்லையன்றோ?
பேணும் அன்பின் உறவொன்றே
பெரிதும் ஆட்சி புரியுமன்றோ?
தோணும் மனிதர் யாவருமே
தோழ ராகத் தெரிவரன்றோ?
ஆணும் பெண்ணும் அவ்வுலகில்
ஆதி சிவநற் சக்தியன்றோ?

8. சக்தி ஒன்றே ஆளுகின்ற
தன்மை யினைநாம் கண்டிடுவோம்!
சக்தி ஒன்றே நிறைந்தெங்கும்
தரணி யியக்கும் நிலைதெளிவோம்!
சக்தி ஒன்றே உலகனைத்தும்
தானே ஆட்சி செய்வதனால்
சக்தி ஒன்றே அமைஉலகில்
சார்ந்தொன் ருக வாழ்வோமே!

9. சார்ந்தொன் ருக வாழ்ந்திடுமோர்
சாற்றற் கரிய புதுஉலகில்
சேர்ந்து மக்கள் அன்புறவால்
செம்மை யாகத் திகழ்நிலையே
ஆர்ந்த இன்ப சுகவாழ்வாம்!
அமர வாழ்வும் அதுவேயாம்!
கூர்ந்த ஒருமை உலகமதைக்
கூடிக் கூவி யழைப்போமே!

10. கூவி யழைக்கும் அவ்வுலகில்
கூடிப் பிரியும் கொள்கையில்லே!
மேவி வாழும் அன்புறவே
மேலாம் அதன்மெய்க் குறிக்கோளாம்!
மேவும் உலகம், உயிர்,உடலில்
விரவும் உறவை நன்கறிந்தும்
ஆவி மகிழப் பணிசெய்தும்
அகிலம் இணையக் காண்போமே!

33. தமிழரசி கொலுவிருந்தாள்!

1. தெருவெல்லாம் தமிழ்முழக்கம்!
தேசமெல்லாம் தமிழ்நேசம்!
உருவெல்லாம் தமிழ்வடிவம்!
ஊக்கமெல்லாம் தமிழ்ஆக்கம்!
அருமைநிறை தமிழரசி
ஆட்சிதனில் தமிழ்பெற்ற
பெருமைதனே விரிவாகப்
பேசிடவாய் இனித்திடுமே!

2. துங்கமிகு சங்கமதில்
தூயதமிழ்ப் பேரரசி
பொங்குமுயர் தமிழ்பாடும்
புலவோரின் சீரேற்றுத்
திங்களெனச் சுடர்வீசித்
திக்கெட்டும் புகழ்மேவி
இங்கிதமாய்க் கொலுவிருந்த
இயல்புதனைச் சொலத்தரமோ?

3. சேரரெனும் சோழரெனும்
செழியரெனும் மூவேந்தர்
தீரமுடன் தமிழினுக்குத்
திருமுடியே சூட்டுவித்துப்
பாரெல்லாம் தமிழ்க்கலையின்
பாங்கினையே எடுத்துரைக்க
வீரமணித் தமிழரசி
விந்தையுடன் கொலுவிருந்தாள்!

4. வள்ளுவரின் குறள்கண்டும்
வாய்மைதிகழ் கம்பருடை
தெள்ளுதமிழ் நூல்கண்டும்
தேமதுரத் தமிழரசி
கள்ளமிலாப் பாவலரின்
காவியங்கள் பலகண்டும்
உள்ளமிகக் களிததும்ப
ஓவியமாய்க் கொலுவிருந்தாள்!

5. தித்திக்கும் முத்தமிழின்
திறமனைத்தும் முழங்கிடவே
எத்திக்கும் தமிழெனவே
ஏற்றிஇசை வழங்கிடவே
சித்திக்கும் அறம்யாவும்
சேர்ந்திடவே தமிழரசி
புத்திக்கு வழிகாட்டும்
புனிதமுடன் கொலுவிருந்தாள்!

6. தன்மகனைத் தேர்க்காலில்
தான்வைத்துத் தேரோட்டி
இன்பஅறம் நாட்டுவித்த
இணையில்லா மன்னவனும்
தன்தலையைத் தமிழுக்காய்த்
தரவந்த கொற்றவனும்

பொன்னிகர்த்த தமிழணங்கின்
புண்ணியமார் செல்வமன்றே?

7. ஆளுகின்ற மன்னவர்கள்
அருந்தமிழின் சுவையறிந்து
நாளுமிகக் கண்ணெனவே
நானிலத்தில் வளர்த்ததனால்
நீளுகின்ற பெருவாழ்வில்
நிலைகொண்ட தமிழரசி
மூளுகின்ற இடரின்றி
முதன்மையளாய்க் கொலுவிருந்தாள்!

8. கோலமுடன் தமிழரசி
கொலுவிருந்து மாட்சிதந்த
காலமதின் பொன்னேட்டைக்
கருத்தூன்றி நோக்கிவிட்டால்
ஞாலமதில் தமிழணங்கு
நல்லாட்சி புரிந்திருந்த
சீலமதைக் கண்டுள்ளம்
சீரிசைதான் பாடிடுமே!

34. அன்னைமொழி நீயன்றே!

1. உன்னைநான் மறப்பதுண்டோ?—தாயை
உலகில்சேய் துறப்பதுண்டோ?
அன்னைமொழி நீயன்றே?—என்றன்
ஆருயிரும் நீயன்றே?

2. தீங்கரும்பும் கற்கண்டும்—உன்றன்
தேன்மொழிக்கு நிகராமோ?
பாங்குடைய கலைபலவும்—அமைந்த
பைங்கிளியே! என்தமிழே!

3. என்றுமுள தென்தமிழே!—மாறு
இளங்கன்னி யாகிவிட்டாய்!
நன்றுன்னை முடிசூட்டிப்—புலவோர்
நாடறியச் செய்துவிட்டார்!

4. வள்ளுவரை ஈன்றதனுல்—என்றும்
வான்புகழைப் பெற்றுவிட்டாய்!
தெள்ளுதமிழ்க் கவிபலரால்—உன்சீர்
தேசமெங்கும் ஓங்குதன்றோ?

5. தித்திக்கும் இனிமையென்ற—நல்ல
திருப்பேரால் இயங்குகின்ற
எத்திக்கும் புகழ்தமிழே!— அறிஞர்
இதயத்தில் வளர்அமிழ்தே!

6. உன்னைநான் எண்ணுகையில்—இன்பம்
ஊற்றுகப் பொங்கிடுதே!
என்னைநான் மறந்திருக்கும்—அரிய
எழில்நிலையும் தங்கிடுதே!

35. வருகின்ற எழில்பாராய்!

1. வருகின்ற எழில்பாராய்!—முருகன்
வண்ணப்பூங் கழல்சேராய்!
உருகிநிதம் கரைபவரின்—நெஞ்சம்
ஓங்குமொரு சிங்காரன்
வருகின்ற எழில்பாராய்!

2. கோலமயில் மீதமர்ந்து—மருங்கில்
குலவுமிரு மாதருடன்
சிலஇசைச் சிலம்பொலிக்க—அன்பர்
சித்தமது மிகக்களிக்க
வருகின்ற எழில்பாராய்!

3. உளமினிக்கும் தமிழ்கேட்க—நல்ல
உத்தமர்தம் குறைநீக்க
வளமளிக்கும் ஆறுமுக—வீர
வள்ளலெனும் பேரழகன்
வருகின்ற எழில்பாராய்!

4. வேராகி வளர்ந்திருக்கும்—சுமந்த
வினையாகும் மரம்சாய்த்து
நேரான சுகங்கொடுக்கச்—சக்தி
நெடிவேலைக் கரத்தேந்தி
வருகின்ற எழில்பாராய்!

5. ஆணவத்தோர் அறியாத—தூய
அறிவுடையோர் மறவாத
மாண்புநிறை தமிழ்வாணர்—உள்ளம்
மகிழ்ந்தேத்தும் மால்மருகன்
வருகின்ற எழில்பாராய்!

6. தருணமிதை நழுவாமல்—பெண்ணே!
தஞ்சமெனத் தாள்பணிவாய்!
அருமைமிகும் வாழ்வளித்துக்—கண்ணே!
அணைத்துன்னைக் கரைசேர்ப்பான்!
வருகின்ற எழில்பாராய்!

36. ஞானக் கலைஞன்!

வள்ளி:— மானைத் தேடி வந்தநீர்
மானைத் தேடிப் போகாமல்
மானைப் பொருளாய் உட்கொண்டு
மயங்கி இங்கே நிற்பதும்ஏன்?

வேலன்:— மானின் மருளும் விழியிரண்டை
வஞ்சி, உன்பால் கண்டதனால்

மானும் நீயோ எனயெண்ணி
மயங்கி எனையே மறந்துநின்றேன்!

வள்ளி:— மானை நாடி வந்துபின்னர்
மங்கை எனையே மானென்று
ஞான மின்றிச் சொல்லும்நீர்
ஞாலந் தனிலோர் கள்ளனன்றோ?

வேலன்:— ஞான மில்லாக் கள்ளனென்றே
நற்றேன் வாயால் மொழிந்தாலும்
ஞானக் கலைஞன் நான்ஆவேன்!
நங்கை நீயும் மான்ஆவாய்!

வள்ளி: — தனியே ஒருபெண் இருக்கையிலே
தவஞ்சேர் ஞானக் கலைஞனென்போன்
"இனிய மான்நீ" எனப்பேசும்
எண்ணத் துடனே வருவானோ?

வேலன்:— தனித்தே இருக்கும் நிலையறிந்து
சதுராய் வந்தோன் கள்ளனன்று!
கனிந்த ஞானம் உள்ளவனும்!
கலையின் உயிரே, தெளிந்திடுவாய்!

37. சிங்காரப் பண்ணிசைத்தான்!

1. சிங்காரப் பண்ணிசைத்தான்!—கண்ணன்
செழுந்தேனாய்க் குழலிசைத்தான்!
மங்காத புகழ்மேவும்—ஞான
மாதவனும் கோபாலன்
சிங்காரப் பண்ணிசைத்தான்!

2. பெண்களினம் உளமுருகிக்—கீதப்
பித்தாகி உணர்வழிய

வண்ணவேய்ங் குழல்பிடித்தே—நாத
வானமுத மழைபொழிய
சிங்காரப் பண்ணிசைத்தான்!

3. ஆவினமும் மானினமும்—கொடிய
அரவினமும் புலியினமும்
மேவுகிற செயல்மறந்து—கான
மெய்ப்பாட்டில் லயித்திருக்கச்
சிங்காரப் பண்ணிசைத்தான்!

4. ஓங்கார இசைமுழங்க—இந்த
உலகெல்லாம் அதில்மயங்க
ஆங்காரப் பேய்ஒடுங்க—இன்ப
அருட்சோதிப் பொருள்விளங்க
சிங்காரப் பண்ணிசைத்தான்!

38. இத்தனை மயக்கம் ஏனோ?

1. இத்தனை மயக்கம் ஏனோ?—அவன்மேல்
இத்தனை விருப்பம் ஏனோ?
பித்தனை நினைந்தாள் பேதை—என்றே
பேசிடில் மிகவும் வாதை!
இத்தனை மயக்கம் ஏனோ?

2. சுடலையில் ஆடித் திரிவான்!—பேய்கள்
சூழ்ந்திட விந்தை புரிவான்!
உடலினில் உமைக்குப் பாதி—அன்பாய்
உவந்தவன், தெரிவாய் சேதி!
இத்தனை மயக்கம் ஏனோ?

3. மேனியில் சாம்பல் பூசி—ஞானம்
மேவிடும் வார்த்தை பேசிச்

சூனிய வெளியில் ஒளிர்வான்!—தூரிய
சுகபர நிலையில் மிளிர்வான்!
இத்தனை மயக்கம் ஏனோ?

4. சாக்கியன் கல்லால் அடித்தான்!—விசயன்
சார்ந்திடும் வில்லால் அடித்தான்!
பாக்கியம் என்றே பட்டான்!—சிவனும்
பக்தரின் இதயம் தொட்டான்!
இத்தனை மயக்கம் ஏனோ?

5. நகையெனப்பாம்பைஅணிந்தான்!—கொடிய
நஞ்சினைக் குடிக்கத் துணிந்தான்!
நகைப்பினால் புரங்கள் எரித்தான்!—முக்கண்
நாயகன் எனப்பேர் விரித்தான்!
இத்தனை மயக்கம் ஏனோ?

6. ஓட்டினை ஏந்திப் பிச்சை—கேட்ட
ஊரிலான் மேலோ இச்சை?
பாட்டினில் மயங்கும் பித்தன்!—தானே
பாடியும் மகிழும் சித்தன்!
இத்தனை மயக்கம் ஏனோ?

7. விருப்பொடு வெறுப்பும் அற்றான்!—கைலை
வெற்பினில் தவமும் உற்றான்!
திருவளர் பருவப் பெண்ணே!—இந்தச்
சிவனைநீ அறிந்த திலையோ?
இத்தனை மயக்கம் ஏனோ?

39. அவனை நம்பு மனமே!

1. அவனை நம்பு மனமே!—என்றும்
அவனை வேண்டு மனமே!
கவலை சேர்ந்த போதில்—அதனைக்
கணத்தில் போக்க வல்லான்!
அவனை நம்பு மனமே!

2. பந்த பாசம் மிகுந்த—தீய
பாப எண்ணம் நிறைந்த
இந்த உலகோர் போலே—உன்னை
என்றும் கைவிட மாட்டான்!
அவனை நம்பு மனமே!

3. வினைகள் வருத்த வந்தால்—அவற்றின்
வேரை அறுக்கச் செய்வான்!
மனைநன் மக்கள் வாழ—தூய
மார்க்கம் காட்டி யாள்வான்!
அவனை நம்பு மனமே!

4. மானம் இழக்கச் செய்யான்!—சுத்த
மதியும் தளரச் செய்யான்!
ஞானக் கண்ணுல் பார்த்தே—உன்னை
ஞாலம் போற்றச் செய்வான்!
அவனை நம்பு மனமே!

5. அற்ப ரிடமே சென்று—வீணே
அவர்தம் தயவை வேண்டி
நிற்கச் செய்ய மாட்டான்!—நாளும்
நிமிர்ந்தே நடக்கச் செய்வான்!
அவனை நம்பு மனமே!

6. குற்றம் குணமாய்க் கொள்வான்!—நேர்ந்த
குறைகள் சொன்னுல் கேட்பான்!

உற்ற துணையாய் இருப்பான்!—தருண
உதவி புரியத் தவருன்!
அவனை நம்பு மனமே!

7. வாழ்வுக் கப்பல் செல்ல—எந்த
வகையும் தோன்ருதிருந்தால்
தாழ்வில்லாத ஒளியும்—அவனே
தந்து முன்னே செல்வான்!
அவனை நம்பு மனமே!

8. அன்பு வள்ளல் அவனே!—அனைத்தும்
அறிந்த அண்ணல் அவனே!
இன்பம் தருவோன் அவனே!—சோதி
இறைவன் என்போன் அவனே!
அவனை நம்பு மனமே!

40. வானம்!

1. மதிப்பிட முடியா வானமே! உன்றன்
வரையினைக் கண்டவர் எவரே?
கதிரொடு மதியும் கணக்கிலா மீனும்
கவின்பெற ஒளிர்ந்திடும் இடம்நீ!
நிதியருட் கதிர்சேர் நிமலனும் உனது
நீலநல் வெளிதனில் உளனே?
மதியுடன் உன்னை மாண்புற வெண்ணில்
மனத்தெழுங் கற்பனை பலவே!

2. உயர்ந்திடும் உன்னை உற்றுமே நோக்கில்
உள்ளமும் விரிந்திடும் உன்போல்!
அயர்வினை நீக்கி அகஒளி பெருக்கும்
அழகுறு வடிவமும் உனதே!

வியந்திடச் செய்யும் விந்தைகள் கோடி
விளைத்திடும் ஆற்றலும் உனதே!
சுயநினை வழித்துச் சொக்கவே வைக்கும்
தூயஉன் எழில்வளம் பெரிதே!

3. இறையினை அறிய எண்ணிய தொக்கும்
எங்கணும் நீண்டிடும் உன்னை
அறிந்திட யானும் ஆசைகொண் டதுவே!
அளப்பரும் பொருளென அமையும்
இறையினை முற்றும் இனிதுற அறிய
இயலுமோ எளிதினில்? அதுபோல்
நிறைந்திடும் விண்ணே! நினதியல் பெல்லாம்
நினைந்தள விடுதலும் அரிதே!

4. உன்னுளே அடங்கும் உலகமெத் தனையோ?
உறைந்திடும் கோட்களெத் தனையோ?
பொன்னுளே பொதியும் பொலிவென உன்னுட்
பொருந்திடும் சுடருமெத் தனையோ?
உன்னுடைப் பரந்த உருவினைக் கருதில்
உளத்தினில் அகந்தையும் வருமோ?
மின்னிடும் வானே! மேன்மையின் வடிவாய்
மேவிடும் உனைநினை வேனே!

5. உன்னைநான் உணர உதவிடு வாயோ?
ஓங்கிடும் வானமே! யானும்
உன்னையே நிகர்க்கும் உன்னத வாழ்வில்
ஒன்றிடும் எண்ணமும் கொண்டேன்!
உன்னுடை உலகில் ஓரவஞ் சனைகள்
ஒன்றுமே இலையெனச் சொல்வார்!
என்னுடை விருப்பம் ஏற்றுநீ விண்ணே,
எனக்குனை உணர்த்திடு வாயே!

41. உள்ளத் தாமரை!

சீடன்:— தாமரை மலர்ந்ததல்லால்—உள்ளத்
தாமரை மலரவில்லை!
தாமச நெஞ்சகம்தான்—அவிழும்
தருணமும் வருவதெப்போ?

குரு:— பங்கயம் மலர்ந்திடவும்—எங்கும்
பாழிருள் மறைந்திடவும்
சங்கிசை முழங்கிடவும்—உதயம்
சார்ந்திடு தல்எதனுல்?

சீடன்:— கதிரெனும் ஒளிபரப்பி—இந்தக்
காசினி இருளகற்றி
மதியெனும் உணர்வூட்டும்—சுடரோன்
மாபெரும் வருகையினுல்!

குரு:— பரிதியின் வருகையினுல்—பாரில்
பங்கயம் மொட்டவிழும்!
அருளெனும் கதிர்வரவால்—கமல
அகமலர் கட்டவிழும்!

42. எந்நாளும் பண்டிகையாம்!

மனைவி:—

காலமெலாம் இசைபாடிக்
கவலையெலாம் மறந்திருந்தால்
கோலமுடன் நம்முடைய
குடும்பம்தான் நடந்திடுமோ?

இசைப்புலவன்:—

கானமெனும் துணையின்றேல்
கவலையெலாம் மறப்பதெங்கே?
ஞானமெனும் பொருளொன்றே
நாம்பெற்ற பெருஞ்செல்வம்!

மனைவி:—

பற்றகன்ற முனிவர்போல்
பகர்வதனுல் பயனுண்டோ?
உற்றதுவே பண்டிகையாம்
உயர்தீபா வளித்திருநாள்!

இசைப்புலவன்:—

பண்ணிசைக்கும் நாளெல்லாம்
பாரினிலே திருநாளாய்
எண்ணுகின்ற புலவோனுக் (கு)
எந்நாளும் பண்டிகையாம்!

43. ஒளி உதயம்!

1. ஒளிஉதயம் காணுவோம்!
உயர்அன்பே பூணுவோம்!
களிநடமே ஆடுவோம்!
கருத்திணைந்து கூடுவோம்!

2. புதுவாழ்வு வேண்டுவோம்!
புன்மைநெறி தாண்டுவோம்!
புதுயுகத்தைக் கூவுவோம்!
புண்ணியராய் மேவுவோம்!

3. தீயிருளை ஓட்டுவோம்!
தெளிந்துநன்மை கூட்டுவோம்!

சீரருளைப் பாடுவோம்!
சிறந்தவழி தேடுவோம்!

4. தீபவிளக் கேற்றுவோம்!
தேசநலம் போற்றுவோம்!
பாபமெலாம் போக்குவோம்!
பாரினைச்சீர் ஆக்குவோம்!

5. பாவைகுலப் பெருமைசொல்லும்
பாமையவள் புகழ்சொல்லிச்
சேவையிலே சிறந்திடுவோம்!
சீரொளியே நிறைந்திடுவோம்!

6. பரங்கருணைக் கண்ணனவன்
பாமையவள் துணையாலே
நரகனையே வென்றகதை
நன்றேநாம் நினைந்திடுவோம்!

44. புதிய கதிர்!

1. பலாவின்இன் சுளையாகப்
பழுத்ததமிழ்த் தேன்மாந்தும்
கலாமதியார் உளக்கதிர்போல்
காட்சிதரும் புதியகதிர்!

2. கீழ்வானில் சுடர்வீசிக்
கிளம்புகின்ற செங்கதிர்போல்
வாழ்கின்ற உயிர்க்குணவு
வழங்களமும் புதியகதிர்!

3. சிவந்ததழல் வடிவான
சிவபரனை நினைவூட்ட
உவகையுடன் விளைந்தாற்போல்
ஓங்கிநிற்கும் புதியகதிர்!

4. மாசில்லாப் பருவமுற்று
மணக்கோலம் பூணநிற்கும்
தேசுமிகும் புதுப்பெண்போல்
திகழ்ந்தொளிரும் புதியகதிர்!

5. பழமைவழி விலக்கிஒளி
பரவுமொரு புதுப்பாதை
எழுந்தாற்போல் நனிவிளங்கும்
இனிதுயர்ந்த புதியகதிர்!

வேறு

1. புதையலொன்று காணுகின்ற
போதிலெழும் மகிழ்வினைப்போல்
நதிவாய்க்கால் நீர்பாய்ச்சி
நல்லேரால் நிலம்உழுது
விதைதெளித்து நடவுநட்டு
விளைந்தபயிர் மணிகொண்டு
புதியகதிர் வரக்கண்டு
பொங்குமகிழ் வுற்றோமே!

2. கங்குலினை அகற்றிஒளிக்
கதிர்பரப்பிக் காலையெழும்
செங்கதிரின் வரவுகண்டு
சிரித்தெழுமோர் தாமரைபோல்
பொங்குகின்ற வனப்புடனே
புதியகதிர் வரக்கண்டு
மங்களமாய் வாழ்வமென்ற
மலர்ச்சியுடன் எழுந்தோமே!

3. வெய்யகதிர் எழுமுன்னே
விழித்தெழுந்தே ஏர்தாங்கி
வயற்காடு சென்றுழுது
வஞ்சமில்லா நெஞ்சுடனே

வெய்யிலையும் பாராமல்
வேளைபசி கருதாமல்
பொய்யின்றி உழைத்தோரின்
போகமடா புதியகதிர்!

4. எழுந்திட்ட புதியகதிர்
எழில்திகழக் கண்டவுடன்
பழுதறியா மாட்டினமும்
பரவசமே கொள்ளுதடா!
உழுதொழிலுக் குதவியதால்
உவகையுடன் துள்ளுதடா!
அழகுறும்தம் இனத்திற்கும்
அரும்பொங்கல் என்குதடா!

5. கதிராகும் ஞாயிறின்றேல்
காண்கின்ற பகலுமுண்டோ?
கதிராகும் உணவின்றேல்
காணுகின்ற வாழ்வுமுண்டோ?
கதிரிரண்டும் தரும்வாழ்வுக்
கதிகளினால் கதிரெனப்பேர்
பொதிந்ததென்றே விந்தையுடன்
புகலுதடா புதியகதிர்!

6. தன்னைப்போல் உயர்நோக்கும்
தங்கம்போல் நற்குணமும்
மின்னும்வான் நோக்கிடினும்
மேவினதன் னடக்கமொடும்
இன்னலின்றி வளர்த்தவர்க்கே
இனியநன்றி புரிகின்ற
நன்னிலையும் வேண்டுமென்றே
நவிலுதடா புதியகதிர்!

7. புதியகதிர் கண்டதனால்
புனிதஒளி மேவுமொரு

புதுவாழ்வைத் தொடங்கிடுவோம்!
புதுமனிதர் நாமாகிப்
புதுக்காலம் தருகின்ற
பொங்கல்சீர் கொண்டாடிப்
புதியயுகம் கொணர்ந்திடுவோம்!
புன்மையெல்லாம் அகற்றிடுவோம்!

9. மண்ணகத்துப் பொய்யகன்று
மக்களெல்லாம் மெய்பயின்று
விண்ணகத்துப் புதுவாழ்வில்
விளங்கிடவே வேண்டுவமே!
கண்ணகத்தே விளைந்தபுதுக்
கதிர்கூறும் விந்தையினைப்
பண்ணிசைத்துப் புண்ணியமாம்
பால்பொங்க விழைவோமே!

9. வஞ்சமனக் கொடுங்குரங்கும்
வருத்துகின்ற சினப்புலியும்
சஞ்சலம்செய் கடும்பேயும்
சாராமல், சாந்தமுறும்
நெஞ்சகத்தில் எழும்கதிரின்
நிலைபெறுமோர் அருட்சக்தி
கொஞ்சுகின்ற விண்வாழ்வு
கூடிடவே வேண்டுவமே!

10. கண்மூடும் வழக்கங்கள்
கருத்தற்ற பழக்கங்கள்
புண்மூடும் எண்ணங்கள்
பொலிவில்லா இருட்செயல்கள்
மண்மூடி மாய்ந்திட்டு
மதிதெளிந்த புதுநிலையும்
கண்கூடும் ஒளிவாழ்வும்
கைகூட வேண்டுவமே!

11. பார்த்திட்ட பழமையிலே
பதிந்திருக்கும் நல்லவற்றைச்
சேர்த்திட்டுப் புதுமையெனும்
சீரொளியால் மெருகிட்டு
வார்த்திட்ட தங்கம்போல்
வளமைதனைக் கண்டுஅவற்றில்
ஆர்த்திடவே புதியகதிர்
அறிவினின்றும் சிறந்தெழுக!

12. இல்லாத குறையாலே
ஏங்குகின்ற நிலைமாய்க!
இல்லாமை யெனும்பேச்சே
இல்லாமல் அறமாய்க!
எல்லாரும் மகிழ்வெய்தி
இதயத்தே சமமாகிப்
பொல்லாத கலியோடப்
புதியகதிர் இனிதெழுக!

13. இதயமெனும் வயல்தனில்நல்
எண்ணமெனும் விதைவிதைத்து
மதியெனுமோர் நீர்பாய்ச்சி
மமதையெனும் களையெடுத்து
நிதிஅன்பாம் பயிர்விளைத்து
நிறைஞான ஒளிவீசும்
புதியகதிர் நம்முள்ளே
பொங்கியெழக் காண்போமே!

14. உலகமெனும் வயல்தனிலே
ஒருகுலமாம் விதைவிதைத்துக்
கலகமில்லா நெறியாலே
கருத்தொருமை நீர்பாய்ச்சிக்
குலவுகின்ற சமரசமெய்க்
குணமாகும் பயிர்வளர்த்து
நலமுணர்த்தும் புதியகதிர்
நாடெங்கும் காண்போமே!

45. பொங்கலைப் போற்றுங்கடி!

1. பொங்கலைப் பாடியே போற்றுங்கடி!—பாலும்
பொங்கிடக் கண்டுமே சாற்றுங்கடி!
மங்களம் தங்கிடச் சேருங்கடி! —காதல்
மனையறம் பொங்கிடப் பாருங்கடி!

2. அமிழ்தெனச் சோற்றினை ஆக்குங்கடி!—உண்மை
அன்பினை நெஞ்சினில் தேக்குங்கடி!
தமிழின் சுவையென உண்ணுங்கடி!—பொங்கல்
தந்திடும் இன்பத்தை எண்ணுங்கடி!

3. மாட்டுக்கும் பொங்கல் இடுங்களடி!—சுற்றம்
மற்றுமுள் ளார்க்கும் கொடுங்களடி!
நாட்டுக்கும் பொங்கல் இடுங்களடி!—தீமை
நாட்டும் வினையை விடுங்களடி!

4. மாவிலைத் தோரணம் கட்டுங்கடி!—"தை"யின்
மங்கை வருகையைக் கொட்டுங்கடி!
பூவுளோர் வாழ்ந்திடப் பாடுங்கடி!—இன்பம்
பொங்கிட வேண்டியே கூடுங்கடி!

5. ஆனந்தப் பொங்கலைக் கூவுங்கடி!—நெஞ்சில்
ஆதவன் பொன்னருள் மேவுங்கடி!
ஞானம் சுரந்திடக் காணுங்கடி!—இந்த
ஞாலம் சிறந்திட வேணுமடி!

46. சித்திரைக் கன்னி !

1. சித்திரத்தின் எழில்நிகர்த்த சித்திரைக் கன்னி!
-உயர்
செந்தமிழ்ப்பூம் புனல்பெருகும் சீரருட்
பொன்னி!
புத்திளமை தவழுகின்ற பொன்னிற மங்கை!
-தமிழ்ப்
புத்தாண்டின் முதன்மலராய்ப் பூத்திடு
நங்கை!

2. பூங்குயிலின் தேனிசையும் புதுமையு மேவி
-மனம்
பூக்கவரும்வசந்தமதிற் பொருந்திடும்தேவி!
ஓங்குமின்ப விண்கதிரோன் உறைந்திடும்மேடம்!
-அதை
உணர்த்திடுவாள் சித்திரையாள் உவந்திடும்
பாடம்!

3. விளம்புசுகத் தென்றலினை விளைத்திடும் பாவை!-
விதம்
விதமான நினைவுகளை விதைத்திடும் பூவை!
வளமெல்லாம் மிகஅளிக்க வந்திடும் திருவாள்! -
இன்ப
வாழ்வினிலே நமைஆழ்த்த மலர்ந்திடும்
உருவாள்!

4. புத்தாண்டு பிறந்ததென்று புகன்றிடும்
திறத்தாள்!-அரும்
புலவோர்கள் கவிபுனையப் பொலிந்திடும்
அறத்தாள்!

சத்தான செயல்விளையச் சாற்றிடும் குணத்தாள்!
-குறள்
தந்தவனின் வழிநிற்கத் தமிழ்சொலும்
மணத்தாள்!

5. சித்திரையாம் அணங்கவளின் சீரினைச்
சொல்வோம்!-தெய்வச்
செழும்புதிய நல்லாண்டில் சிறப்புடன்
வெல்வோம்!
இத்தரையில் நலம்பெருக இறைவனைப்
பணிவோம்!-சக்தி
இன்னருளின் ஒளிநகையை இதமுடன்
அணிவோம்!

47. பேர் சேர்ப்போம்!

1. நம்முடைய பாரதத்தை நாமே ஆளும்
நல்லாட்சி தனையடைந்தோம்! நலிவில்லாத
செம்மைநிறை திட்டங்கள் சேரக் கண்டோம்!
சேவையொன்றேபுரிந்துநின்றுசிறந்தகாந்தி
தம்முடைய அறநெறியால் தரணி போற்றும்
தன்னிகரில் நிலையுற்றோம்! தவிப்பு நல்கும்
வெம்மைமிகு பிணிவறுமை வீழச் செய்து
வெற்றியெனும் கொடியேந்தி விளங்கு
வோமே!

2. எய்தியதோர் குடியரசை இருகண் போலே
எந்நாளும் காத்திடுவோம்! இதயம் ஒன்றி
மெய்திகழும் சுதந்திரத்தின் மேன்மை யோங்க
மேலான பணிசெய்வோம்! மேவு துன்பப்

பொய்திகழும் வழிவிலகிப் புனிதன் காந்தி
புகன்றஅருட் பாதைதனிற் பொருந்தி
யின்பம்
பெய்திடுமோர் வகைபெறுவோம்! பிறந்த நாடு
பீடுடனே இலங்கிடுமோர் பேர்சேர்ப்
போமே!

48. ஏற்றம் வெல்க!

1. ஒருகால் துலாக்கோல் சாயினும்தாம்
உயர்வாய்ப் பிடித்த நடுநிலைமை
அருள்சேர் கொள்கை யெனுங்கோலை
அணுவின் அளவும் சாயாமல்
கருத்தாய் என்றும் காத்திருக்கும்
கண்ய மிகுந்த பாரதத்தை
வருத்த முனைந்த சீனருக்கு
மன்னிப் புண்டோ அரங்கினிலே?

வேறு

2. நானிலத்தில் போர்தொடுத்து
நாட்டாசை வெறியெடுத்து
மானிடத்தின் மதியழிந்து
மதிப்பிழந்த பேரரக்கன்
ஈனமிகும் இட்லரவன்
இறுதியிலே ஒழிந்ததுண்மை!
சீனரக்கன் அஃதேபோல்
தீர்ந்திடலும் உண்மையடா!

3. கலகப்போர் தொடுத்திட்ட
கயவரெல்லாம் முடிவினிலே

விலங்குற்றுச் சிறைப்பட்டு
வீழ்ந்தகதை அனைத்தினையும்
உலகத்தின் வரலாறும்
உரைப்பதுண்மை! போர்தொடுத்த
விலங்கனைய சீனர்களும்
வீழ்ந்தொழிதல் உண்மையடா!

4. புத்தவள்ளல் காந்தியண்ணல்
போந்துரைத்த பாரதத்தில்
சித்தமற்ற கொடும்பகைவர்
சிறுமதியார் சீனரவர்
யுத்தமொன்றைத் தொடுத்திட்டார்!
யூகமிகு தலைவரெல்லாம்
மெத்தவுமே அதைவெறுத்தார்!
மேன்மையற்றார் சீனரடா!

5. வலியவந்த மாற்றாரின் வலிமை தீர்க!
மாவீர பாரதத்தின் மாண்பு சேர்க!
கொலைப்பகைவர் சீனருடை கொடுமை வீழ்க!
கோலமுயர் தாயகத்தின் சீலம் வாழ்க!

6. இழிசீனர் எல்லைவிட்டே இன்றே செல்க!
இல்லையெனில் நம்வீரர் எதிர்த்தே வெல்க!
வழிகாட்டும் பாரதத்தை வான்பு கழ்க!
மணிக்கொடியின் ஒளிவீசி மனம கிழ்க!

7. நம்முயிரின் இனியதெனும் நாட்டைக் காக்க!
நாடியதீப் பகைவீழ்ந்து நலன்கள் பூக்க!
செம்மைமிகும் பாரதத்தின் சீர்த்தி யோங்க!
சீரழிந்த சிறப்பழிந்த சீனர் நீங்க!

8. இணைந்தொன்றாய்ப் பகைவெல்லும் எண்ணம்
வெல்க!
இணைந்தென்றும் இருக்கவெண்ணும்
இதயம் வெல்க!

இணைந்துநின்று சீனரைநாம் எதிர்த்தல் வெல்க!
இணைந்தபெரும் பாரதத்தின் ஏற்றம்
வெல்க!

49. வெற்றி கொள்வோம்!

1. வெஞ்சமர்க்கும் அஞ்சாத வீரமுள்ளோர்
என்றே
வெறிபிடித்த சீனரையே வெற்றிகொள்வோம்
இன்றே!
துஞ்சுதலே அறியாத தொன்மறவர் நாமே!
துள்ளுபகை யறவாகை சூடுபவர் நாமே!

2. மண்ணாசை நிறைசீன மாற்றாரை யழிப்போம்!
மகிமைநிறை பாரதத்தாய் மனமகிழச்
செழிப்போம்!
புண்ணான தருணமிதைப் புரிந்துசெயற்
படுவோம்!
பொல்லாத சீனவிடப் பூண்டறவே
சுடுவோம்!

3. சீலமுற்றும் மறந்தவரைச் சினந்துமுறி
யடிப்போம்!
செம்மையுற்ற நமதெல்லைச் சீர்க்கோட்டைப்
பிடிப்போம்!
காலமதில் அறம்வெல்லக் காண்பவரும் நாமே!
காந்திநெறி யேந்திநிற்கும் சாந்தியரும்
நாமே!

4. தாய்சக்தி மாகாளி தன்கண்ணை விழிப்பாள்!
தாவிவரும் கனற்பார்வை தனிற்பகையை
யழிப்பாள்!

வாய்த்திடுமே அவள்துணையால் வல்லவெற்றி
நமக்கே!
வாட்டமின்றிப் போர்செய்வோம்!
வான்புகழும் நமக்கே!

5. ஆக்ரமிக்கும் எதிரிகளை அடியோடே ஒறுப்போம்!
ஆணவஞ்சேர் சீனுவின் அழிசெயலை
வெறுப்போம்!
சாக்ரதைசேர் இந்தியர்நாம் சத்தியத்தால்
வெல்வோம்!
தக்கபடை பலம்பெருக்கித் தருமத்தால்
வெல்வோம்!

50. வாழ்வு பெறுவோம்!

1. கூவுகின்ற புதுயுகத்தின் குணமனித ராகிக்
கொழிக்கின்ற கலையின்பக் கூத்தெல்லாம்
கண்டு
மேவுகின்ற சத்தியத்தின் மேன்மையிலே ஞான
வெற்றிபெற்றுக் கொடிநாட்டி வேதஇசை
முழக்கித்
தூவுகின்ற மலர்மணத்தின் தூய்மையிலே சக்தி
துலங்குகின்ற நலமறிந்து தொண்டொன்றே
நோக்காய்
ஏவுகின்ற சாத்திரத்தின் இயல்புணர்ந்து
நாளும்
இணையில்லாப் பெருவாழ்வில் இனிதுமகிழ்
வோமே!

2. நாடுகின்ற புதுயுகத்தின் நன்மனித ராகி
நன்மையொன்றே புரிகின்ற நாட்டமுற்று
விரும்பித்
தேடுகின்ற பொருளனைத்தும் தெய்வவொளி யாகித்
தித்திக்கச் செய்கின்ற தெள்ளியஅன்
போங்கிப்
பாடுகின்ற பாட்டெல்லாம் பயனளிப்ப தாகிப்
பண்புதரு மெய்யருளாம் பயிர்வளர்த்தெல்
லோரும்
கூடுகின்ற நிலைகொணர்ந்து குலமொன்றே
என்னும்
கொள்கையுடன் எஞ்ஞான்றும் குலவிவாழ்
வோமே!

3. பொலிகின்ற புதுயுகத்தின் புதுமனித ராகிப்
புனிதமிகு நெறிநின்று பொறுமைநகை
பூண்டு
பலிக்கின்ற தவம்பேணிப் பரம்பொருளை
எதிலும்
பார்க்கின்ற உணர்வுற்றுப் பரிசுத்த ராகி
ஒலிக்கின்ற கீதமெலாம் ஓங்காரத் துள்ளே
ஒளிர்கின்ற சுடர்காட்டும் உயர்வினதாய்
அமைத்து
மலைபோலும் உயர்ந்திட்ட மனம்படைத்துநல்ல
மதிபடைத்து மகிழ்வுபொழி வாழ்வுபெறு
வோமே!

———

என். எஸ். சிதம்பரம்

இயற்றிய நூல்களைப் பற்றிய விமரிசனங்களிற் சில:

1. இசைக்கனிகள்!

The author has a gift for poesy. There is gentle eloquence, and the soft words have rhythm.....................

(Y. M. S.) The Hindu, June *11, 1950.*

2. பாடும் கீதம் கேட்குது!

.........The language is simple and fluent............

(Y. M. S.) The Hindu, September 23, 1951.

.........புதிய கருத்துக்களும் புனித உணர்ச்சிகளும் கலந்த காலத்திற் கேற்ற இசை விருந்தாகும்.

ஆனந்த விகடன், டிசம்பர் *16, 1951.*

இதன்கண் பாடல்களனைத்தும் முழுமுழுத் தமிழ்ச் சொற்களால் எளிய இனிய நடையுடன் இடையருத் தேனொழுக்கைப் போல ஒழுகிக் கொண்டிருக்கின்றன......

"ஞான சம்பந்தம்", *10-6-51.*

3. தமிழிசைப் பாடல்கள்!

.........The Tamil of the sahitya is soft and sweet and the sense content worthy and agreeable.

(Y. M. S.) The Hindu, January *20*, 1952.

......இந்நூல் சங்கீதக் கல்லூரி மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறோம்.

தினமணி, *24-9-51*.

......இப்பாக்களின் மூலம் ஆசிரியரது கடவுள் பக்தியின் முதிர்ச்சியையும், சமய மாறு பாடில்லாத சமரச மனப்பாங்கையும் தெளிவுறக் காணலாம். ....ஒவ்வொரு பாடலும் இசையுடன் பாடி இன்புறும் பெருமையுடையது.

வானொலி, திருச்சி, 23-3-53.

4. ஆத்மாஞ்சலி!

The author has gone through many disappointments and vicissitudes. In the midst of his troubles he turned his mind to god in whom he found lasting solace. This experience is expressed in his songs. There are 71 stanzas arranged under *12* heads. He finds godliness in the teachings and lives of the Buddha,

Jesus and Gandhi. His favourite deity is the Devi, who once appeared in his dream as Saraswathy. The poems show the author's purity and simplicity of heart. The stanzas are simple and direct. They are all in Virutham metre. They follow Adivirapandiyar's Kutti Tiruvachagam in the expression of feelings, in directness and in simplicity.

The Hindu, January 17, 1954.

"இடர்ப்பட்ட நெஞ்சம் ஆத்ம சாந்தி பெற வேண்டி இறைப்பொருளை அஞ்சலி செய்ததே இந்த 'ஆத்மாஞ்சலி, என்னும் தொகுப்பில் அடங்கியுள்ள சில பாடல்கள்." இது பாவலர் சிதம்பரம் இதில் எழுதியுள்ள பாயிரம். இன்னும் வேறு பாடல்களும் இதில் உள்ளன. அவை ஆனந்தத்தில் எழுந்தவை. இன்னும் சில சுத்த பக்தியிலேயே கனிந்த பாடல்கள். ஆன்மீக வாழ்வில் இருப்பவர் சிதம்பரம் அவர்கள் என்பது இச்செய்யுள்களால் விளங்குகிறது. கடவுள் வழிபாட்டு நிலையில் அருள் வேண்டும் பாடல்கள், ஆனந்தக் கூத்துப் பாடல்கள், நிஷ்காம்ய பக்தி இம் மூன்றுக்குமே இடம் உண்டு. மூன்றும் நீங்கின சாந்த நிலையிலே பாட்டுமில்லை. கூத்துமில்லை. அதற்காகத்தான் இத்தனை பாட்டும்! சோக நிலையில் இவர் பாடுகின்றார்: "தூயநின் இசையினில் தொழிலையும் மறந்து துலங்கிடுவேனோ, கலங்கிடல் துறந்து?". அடியார்க்கும் அடியேன் என்னும் பாவத்தில் ஏசு நாதர், புத்தர், காந்தி என்போரையும் இவர் பாடுகின்றார். தூய நடையில் உள்ள இப்பாடல்கள் தூய உள்ளத்தை வெளிப்படுத்துகின்றன. சான்றோர்

தொடர்பு நன்மையே செய்யும். எனவே எல்லோரையும் இப்பாடல்களைப் படித்து உணருமாறு வேண்டுகிறேம்.

"சாயணு" "சுதேசமித்திரன்", 24-1-'54.

......இந்நூல் முழுதுமே கனிவும், குழைவும், சோகமும், அன்பும் விரவிவந்து படிப்போருள்ளத்தைத் தம் வயமாக்குகின்றன..................

"தமிழ்நாடு", *24-1-*54.

அமைதியை நாடும் உள்ளத்துக்கு, இறைவனின் அருட்பேரொளியைக் காட்டிச் சாந்தியளிக்கும் பக்தி உணர்வூட்டும் பாடல்களைக் கொண்டு "ஆத்மாஞ்சலி" வெளியாகியிருக்கிறது.

"ஓங்காரப் பொன்மணியில்
உன்னதமாய் நானமர்ந்தே
ஆங்காரந் தவிர்ந்துன்றன்
அருட்புகழைப் பாடேனே?"

என்று படிக்கும்போது உள்ளம் கனிந்து உருகுகிறது.

"கல்கி" 1954 நவம்பர், 28.

திரு. என். எஸ். சிதம்பரத்தின் வேறு நூல்கள்



வெளிவந்தவை:

1. இசைக்கனிகள்
2. பாடும் கீதம் கேட்குது!
3. தமிழிசைப் பாடல்கள்!
   (திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி வெளியீடு)
4. பராமுகம் ஏன் ?
   (இசை நாடகங்கள்)
5. வள்ளல் கீதம்
6. ஆத்மாஞ்சலி
7. ஸ்ரீவடபழனி முருகன் பாமலர்
   (தேவஸ்தான வெளியீடு)
8. திருவான்மியூர் அஞ்சலி—நவக்கிரக நல்லஞ்சலி
   (தேவஸ்தான வெளியீடு)
9. திருமயிலைப் பாமாலை
   (தேவஸ்தான வெளியீடு)
10. அங்கயற்கண்ணி அஞ்சலி
11. கீதமலர்
12. கற்குளக் கவிமலர்

வெளிவருபவை:

1. இசைக்கோயில் (இசைப் பாடல்கள்)
2. நீலமயிலே! (குழந்தைப் பாடல்கள்)
3. இதயத்தந்தி (சிறு கதைகள்)

கிராமஜோதி நூலகம்

16. இராமகிருஷ்ணமடம் சாலை,
மயிலாப்பூர் : : சென்னை-4

'acket Printed at Metropolitan Printers Madras 2